
www.tamilarangam.net



www.tamilarangam.net

# இப்படித்தான்

ஜெயராஜ்

ஐ.நா. சனத்தொகை நிதியம் அண்மையில் உலக சனத்தொகை பற்றிய ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த வருட உலக சனத்தொகை, குடிப்பரம்பல், புலப்பெயர்வுகள், சூழல் பாதுகாப்பில் சனத்தொகை ஏற்படுத்தும் தாக்கம் என்பன இந்த அறிக்கையில் முக்கியமாக ஆராயப்பட்டுள்ளன. 'சமநிலையில் ஓர் உலகம்' எனத் தலைப்பிடப்பட்ட இந்த அறிக்கையில் பல பயனுள்ள தகவல்கள் உள்ளன.

* 1992 நடுப்பகுதியில் உலக சனத்தொகை 548கோடியாக இருக்கும். வருடாந்தம் இத்தொகை (சராசரியாக) ஏறத்தாழப் பத்துக் கோடியால் அதிகரிக்கும். முக்கியமாக லத்தீனமெரிக்க, ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் இந்த அதிகரிப்பு இருக்கும். தென்னாசிய, ஆபிரிக்க நாடுகளில் மொத்த சனத்தொகை அதிகரிப்பின் பாதி இருக்கும்.

* சனத்தொகை எதிர்காலத்தில் எவ்வாறு அதிகரிக்கும் என்பது பற்றி மூன்று விதங்களில் எதிர்வு கூறப்படுகிறது.

சனத்தொகை அதிகரிப்பு நடுத்தரமாக இருக்கும் பட்சத்தில் 2025ஆம் ஆண்டில் 850கோடியாக அதிகரிக்கும் சனத்தொகை 2050இல் 1000கோடியை எட்டும். 2150இல் 1160 கோடியாக இருக்கும்.

மிகக்கூடிய வீதத்தில் அதிகரிப்பு நிகழ்ந்தால் 2050ஆம் ஆண்டில் 1250 கோடியாகவும், 2150இல் 2070 கோடியாகவும் சனத்தொகை அதிகரிக்கும்.

குறைவான வீதத்தில் சனத்தொகை அதிகரித்தால், அடுத்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் 850 கோடியாகும் சனத்தொகை பின்னர் படிப்படியாக வீழ்ச்சி



## உலகம் இப்படித்தான்!

அடையும்.

* சமமற்ற பொருளாதார வளர்ச்சி மக்கள் பெருமளவில் இடம்பெயரத் தூண்டுதலாக அமையும்.

அடுத்த பத்தாண்டுகளில் நகர்ப்புறச் சனத்தொகை 83வீதத்தால் கூடும்.

தற்போது 115 கோடி மக்கள் முற்றிலும் வறுமையில் வாடுகின்றனர். இது 1970இல் இருந்த தொகையைவிட 21கோடி அதிகமாகும்.

* 1970இல் இருந்ததைவிட மேலதிகமாக, ஆறுகோடி சிறுவர்கள் பாடசாலை வசதியின்றி உள்ளதுடன், ஆறரைக் கோடி சிறுவர்கள் அடிப்படைக் கல்வியறிவற்றும் (எழுத வாசிக்கத் தெரியாத நிலையில்) உள்ளனர். இந்த 22 வருடங்களில் போசாக்குணவற்ற சிறுவர் தொகை ஐந்துகோடியால் அதிகரித்துள்ளது.

* 1980களில் குறைந்த சனத்தொகை வளர்ச்சியைக் காட்டிய நாடுகளில் அபிவிருத்தி காணப்பட்டதாக அவதானிக்கப் பட்டுள்ளது. இந்த நாடுகளில் சராசரியாகத் தனிநபர் வருமானம் 2.5 வீதத்தால் அதிகரித்துள்ளது.

*முழுமையான வறுமை ஒழிப்பு, கல்வி மற்றும் மருத்துவ வசதிகளின் அதிகரிப்பு, சமூகத்தில் பெண்களின் நிலை உயர்த்தப்படல் போன்றவற்றால் சனத்தொகை அதிகரிப்பு, சமநிலையை எய்தச் செய்யலாம் என இந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்க் குடும்பம் மீது தாக்குதல்!

— மணி —



பிறந்துள்ள புதுவருடம் நோர்வேவாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரை சற்று அதிர்ச்சியுடனேயே பிறந்தது. ஆம், யாரும் எதிர்பாராத அளவிற்கு வருடம் பிறந்து மூன்றாவது நாளே ஒரு தமிழ்க் குடும்பம் நோர்வேஜிய இளைஞர் சிலரின் வன்முறைத் தாற்குதலுக்கு உள்ளானது. இந்தத் தாக்குதலுக்குரிய பின்னணி எதுவென இதுவரை உறுதியாக அறிய முடியவில்லை. எனினும் தாக்குதல் நடாத்திய நால்வரும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு, அவர்களில் மூவர் மூன்றுவார கடும்சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப் பட்டனர். இவர்களில் ஒருவர், வெளிநாட்டவர் ஒருவரைத் தாக்கியமைக்காக முன்பே பொலிசாரால் கைது செய்யப்பட்டுத் தண்டனை அனுபவித்தவர்.

பாதிக்கப்பட்ட மயில்வாகனம் பாலசிங்கம் குடும்பத்தினர் நடைபெற்ற சம்பவத்தின் அதிாச்சியில் இருந்து இன்னும் முற்றாக மீளவில்லை. பாலசிங்கமும் அவரது மனைவியும் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். பாலசிங்கம் 20நிமிடங்கள் தடிகளாலும் பொல்லுகளாலும் தாக்கப்பட்டு ரத்தம் வழிந்தோடும் நிலையில் தரையில் வீசப்பட்டார். டெலிபோன் உட்பட வீட்டுப் பொருட்கள் அடித்து நொருக்கப் பட்டன.

தான் உயிர்பிழைப்பேன் என்று நம்பவில்லை எனக் கூறிய பாலசிங்கம் நிகழ்ந்த சம்பவங்களால் தமது இரு பிள்ளைகளும் கதிகலங்கிப் போயுள்ளதாகக் கூறியுள்ளார்.

நோர்வேயின் ஹாரைட் பகுதியில் நிகழ்ந்த இந்தச் சம்பவம் தொடர்பாக நோர்வேயின் தேசியத் தினசரிகள் முக்கியம் கொடுத்துச் செய்தி வெளியிட்டிருந்தன. சில பத்திரிகைகளில் இதுவே தலைப்புச் செய்தியாக இருந்தது. தாக்குதல் நிகழ்ந்த மறுதினம் பல நோர்வேஜியர்கள் தமது ஆதரவையும், அனுதாபத்தையும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குப் பலவழிகளில் தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆதரவாக முழு ஹாரைட் பகுதியும் இருப்பதாக 'ஆப்தன்பூஸ்தன்' பத்திரிகை எழுதியுள்ளது.

தாக்குதலைத் தொடர்ந்து ஜனவரி 5ம் திகதி மாலை தேவாலயத்தில் நிகழ்ந்த பாடல்பூசையில் மக்கள் நிறைந்தனர். சுமார் 850க்கு மேற்பட்ட மக்கள் இப்பூசையில்

www.tamilarangam.net

பங்கேற்றதோடு, சம்பவத்தைக் கண்டித்து நிகழ்ந்த ஊர்வலத்திலும் ஏராளமான நோர்வேஜியர்கள் பங்கெடுத்தனர். தேவாலயத்தில் நிகழ்ந்த பூசைக்கு நியமிக்கப்பட்ட ஆறு காவலாளிகளில் இருவருக்கு பயமுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது. அதேபோல இச்செய்திகளைப் பிரசுரித்த இரு உள்ளூர்ப் பத்திரிகைகளும் மிரட்டப் பட்டன. நிகழ்ந்த சம்பவம் துக்ககரமானது, இனிமேலும் இவ்வாறான சம்பவங்கள் நிகழாது பார்க்கவேண்டியது மிக அவசியம் எனத் தெரிவித்துள்ள ஹாரைட்வாழ் நோர்வேஜியர் ஒருவர் தான் அறிந்தவரை தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கும், புதிய நாஜிகளுக்கும் தொடர்பிருப்பதாகக் கருதவில்லை எனவும், ஆனால் நிகழ்ந்த சம்பவங்களைத் தமக்குச் சாதகமாகச் சிலர் பயன்படுத்த முனையலாம் என்பதையிட்டு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கூறினார்.

நிகழ்ந்த சம்பவம் மிகவும் துக்ககரமானது, இப்படியான சம்பவங்கள் இனியும் நிகழாது பார்த்துக்கொள்ள வேண்டியது எமது பொறுப்பும் கடமையும்கூட. சம்பவங்களைத் தொடர்ந்து பரந்தளவில் நோர்வேஜிய மக்கள் எமக்குக் காட்டிய ஆதரவும், பத்திரிகைகள் உடபடத் தொடர்பு சாதனங்கள் எமக்கு வழங்கிய தார்மீக ஆதரவுமே எமக்குப் பெரியபலம். இதனை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

நடந்த சம்பவங்கள் பற்றிச் சரியான விபரங்களை அறியப் பல்வேறு வழிகளிலும் முயன்றபோது, ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் கிடைத்தன. அடைக்கலம்தேடி வந்த நாம் இந்நாட்டு மக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெறுவதன் மூலமே எமது பிரச்சனைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியும். இந்நாட்டுச் சட்டத்தையும், சமூக அமைப்பையும் நாம் தவறான வழிகளில் பாவிக்க முயல்வது எமக்குள்ள தார்மீக ஆதரவை மாற்றவே வழிவகுக்கும். பல்வேறு பகுதிகளிலும் ஒருசில தமிழர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும் அது எல்லாத் தமிழர்களையும் பாதிக்கும் என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்●




*ஹாரைட் பகுதியில் மொத்தம் 60 தமிழர்கள் வாழ்கின்றனர். தாக்குதலில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டில் சிறையிலுள்ள ஒருவரது தந்தையார், பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து, பூச்செண்டு வழங்கித் தனது அனுதாபத்தையும் தெரிவித்ததோடு, நிகழ்ந்த சம்பவம் தன்னைக் கடுமையாகப் பாதித்ததாகவும் கூறியுள்ளார். பூச்செண்டை வழங்குவதன் மூலம் நடைபெற்ற துயரச் சம்பவத்திற்குப் பரிகாரம் தேடத் தான் முயல்வதாகக் கருதவேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார். இதற்குப் பரிகாரமே இல்லை எனக் கூறிய அவர் தனது மகன் ஒரு இனவாதி அல்ல என்றும், தங்களது குடும்பத்துக்குத் தமிழர்களுடன் நல்ல உறவு இருப்பதாகவும் கூறினார்●*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "தமிழர்களுடைய எதிர்காலத்தை சிங்களவர் தீர்மானிக்க முடியாது"

## யுக்திய ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய



தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும். அவர்களது எதிர்காலத்தை சிங்களமக்கள் தீர்மானிக்கவியலாது. எந்த வித அச்சுறுத்தலுமின்றி தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க தமிழ் மக்களுக்கு பூரண உரிமையுண்டு என்பதை ஆணித்தரமாக கூறுகிறோம் என்கிறார் ''யுத்திய'' ஆசிரியர் சுனந்த தேசப்ரிய.

**சரிநிகர்:**

**குறிப்பிடத்தக்களவான வாசகர்களைக் கொண்ட சிங்களப் பத்திரிகை என்ற வகையில் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான எத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்வது அவசியம் எனக் கருதுகிறீர்கள்?**

**சுனந்த:**

சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ள மற்றைய சிங்களப் பத்திரிகைகள் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக எந்த விதமான கருத்துக்களை முன்வைக்கின்றன என்பது தொடர்பாக நாம் கவனமெடுத்தல் வேண்டும்.

முதலாவது, இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என அவை கூறுகின்றன. எமது கடமை இலங்கை ஒரு பல்லின பலமதங்களைக் கொண்ட நாடு. அது இங்கு வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள்.மலையகத்தவர் என எல்லா இனங்களைச் சேர்ந்தவர்களுக்கும் சொந்தமானது என்ற முக்கிய விடயத்தை வாசகர் மத்தியில் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இரண்டாவது, தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தியதால் தான் இந்த யுத்தம் ஆரம்பமாகியுள்ளது. எனவே யுத்தத்திற்கான காரணம் தமிழ் மக்களே என தமிழர்கள் மீது பழியைப் போடுகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளார்கள். ஆகவே இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு சிங்கள ஆளும் கட்சிகளும், அதன் தலைமையுமே பெருமளவான பொறுப்பை ஏற்க வேண்டும் எனும் காரணத்தைச் சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும்.

மூன்றாவது, சாதாரண சிங்கள மக்களுக்கெதிராக, சிங்களக் கிராமங்களைத் தீவிரவாதிகள் தாக்குகிறார்கள். இதனூடாக எல்லாத் தமிழர்களையும் புலிகளாக, சிங்கள மக்களுக்கெதிரானவர்களாக காட்டுகிற அபாயம் நிகழ்கிறது. இந்த இடத்திலும் உண்மை அவ்வாறில்லை. என்றும் சாதாரண சிங்களமக்களுக்கெதிரான தாக்குதல் நடத்துபவர்களிலிருந்து தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் வேறுபட்டுள்ளன. சிங்கள மக்கள் மீதான தாக்கு

தல்களுக்கு அவர்கள் உடந்தையல்ல என்பதையும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

நான்காவதாக தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீரக்கப்பட வேண்டும். ஒரு அரசியல் தீர்வினை முன்வைக்காமல் புலிகளையோ அல்லது தீவிரப்போக்கையோ ஒருபோதும் முறியடித்துவிட முடியாது.

இந்த முக்கியமான நான்கு விடயங்களையும் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வது அவசியம் என்ற அடிப்படையில் செயற்பட்டு வருகிறோம்.

**சரிநிகர்:**

வட. கிழக்கு இணைப்பு, சுயநிர்ணய உரிமை, தமிழ் முஸ்லிம் மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கல் மலையக மக்களின் பிரஜா உரிமை போன்ற முக்கியமான விடயங்கள் தொடர்பாக 'யுக்திய' எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டு வெளிவருகிறது?

**சுனந்த:**

மேற்குறித்த வியங்கள் தொடர்பாக நிறையவே எழுதி யுள்ளோம். குறிப்பாக தமிழ் மக்களிடையேயிருந்து எவ்வாறு ஆயுதக்குழுக்கள் தோன்றின என்பதை களுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் அறிக்கைகளை சிங்களத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறோம். எமது பத்திரிகையில் மிதவாதத் தமிழ் அரசியல்வாதிகளின் பேட்டியினூடாக அவர்களது கருத்துக்களை சிங்கள மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பேற்படுத்தி இருக்கிறோம்.

எங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால், எமது பத்திரிகையூடாக பிரபாகரன் சிங்கள மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்பினால் அதையும் வெளியிடத் தயாராயுள்ளோம்.

மலையக மக்கள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அபிப்பிராயம் என்னவென்றால் மலையக மக்கள் வந்து சிங்கள மக்களுடைய காணியைப் பறித்தது மட்டுமன்றி அவர்களுடைய வேலைவாய்ப்பு, பொருளாதாரம் போன்றவற்றையும் பறித்து தம்மை மலையகத்திலிருந்து விரட்டுகிறார்கள்' என்பதாகும். ஆனால் உண்மை அதுவல்ல. பிரித்தானியர்களால் பெருந்தோட்டங்களில் வேலை செய்ய கூலிகளாகவே கொண்டு வரப்பட்டனர். கொண்டு வரப்பட்டதிலிருந்து இன்றுவரை கூலிகளாகவே இருக்கும் அவர்களுக்கு எவ்வளவோ நெருக்கடிகளும் பிரச்சினைகளும் உண்டு. அந்தப் பிரச்சினைகள் டும். தமிழர்களுடைய எதிர்காலத்தை சிங்களவர்கள் தீர்மானிக்க முடியாது என்பதை எமது பத்திரிகையில் ஆணித்தரமாகச் சொல்கிறோம். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்படத்தான் வேண்டும் என்று இலகுவாக யாரும் வார்த்தையடிவிட்டு போய் விடலாம். இதை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதுதான் சிக்கலானது, கடினமானது. ஏனெனில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் வடகிழக்கில் வாழ்ந்தாலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்கிறார்கள். முஸ்லிம் மக்களும் அவ்வாறுதான் பரந்து வாழ்கிறார்கள். இந்நிலையில் சுயநிர்ணய உரிமையை அமுல்படுத்துவது என்றால் அதை எவ்வாறு செய்ய வேண்டும் என்பது தொடர்பாக உண்மையாக நாம் ஆராய வேண்டும். ஆகவே பொறுமையுடன் விடயங்களைப் பேசுவதற்கான நிலைமை உருவாக்கப்படல் வேண்டும். நாங்கள் இது தொடர்பாக எமது பத்திரிகையில் எழுதி வருகிறோம்.

**சரிநிகர்:**

ஜாதிக சிந்தனையை, ஹெல உருமய இயக்கம் போன்றவை சிங்களப் பேரினவாதத்தை வளர்த்து வருவதையிட்டு யுக்திய என்ன சொல்ல விரும்புகிறது?

www.tamilarangam.net

www.tamilarangam.net

வரலாறாக எழுதியுள்ளோம். தமிழ்க் கைதிகள் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். அரசாங்கம் தமிழ் மக்களுக்கெதிராக எவ்வாறான ஒடுக்கு முறைகளை மேற்கொள்ளுகிறது என்பது தொடர்பாகவும் நாம் எழுதி வருகிறோம். அதே வேளை இனப்பிரச்சினை பூதாகரமாவதற்கு முன் இப்பிரச்சினைக்குத் தீர்வாக இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த என்.எம்.பெரேரா 'ஒரு மொழி என்றால் இரு நாடு, இரு மொழி என்றால் ஒரு நாடு'' என் தீர்க்கமாகக் கூறியிருந்தார். இதே போல எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க சமஷ்டி முறையை முன் வைத்திருந்தார் என்கிற விடயங்களை எடுத்துக் கூறி மக்களுக்கு டைய சிந்திக்கும் ஆற்றலை முன்னோக்கித் தள்ள முயல்கிறோம்.

இது தவிர இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் போது - அது எவ்வளவு குறைபாடுகளைக் கொண்டிருந்த போதும் - அதிலிருந்த அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக நாம் அதை ஆதரித்து எழுதினோம். இதே போல மாகாணசபைகள் விடயத்திலும் - அதிலும் எவ்வளவு பிரச்சினைகள் இருந்த போதும் - அதை ஆதரித்தோம்.

இன்னும் மனித உரிமை தொடர்பாக நாம் சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லி வருகிறோம்.

முஸ்லிம் மக்களது பிரச்சினை ஒரு புதிய விடயமாகிறது. மற்றையது; முஸ்லிம் மக்களது அபிலாஷைகளைச் சரியாக வெளிப்படுத்துவது யார் என்பது இன்னும் தெளிவாகவில்லை. இப்போதைக்கு அஷ்ரஃப் தான் சில விடயங்களைப் பேசிக்கொண்டிருக்கிறார். எனவே அவருக்கு நாம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். அதேவேளை இப்பிரச்சினையைப் பற்றி முடிவாகச் சில அபிப்பிராயங்களைச் சொல்வது கடினமாயுள்ளது. ஏனெனில் முஸ்லிம்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பரந்து வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அவர்களுக்கான அதிகாரப் பரவலாக்கல், நிர்வாகம் தொடர்பாக தீர்மானிக்க வேண்டியுள்ளது. எனவே இது தொடர்பான நிறையக் கருத்துப் பரிமாற்றம் நிகழ வேண்டும். அதற்கு எமது பத்திரிகையில் முக்கியமான இடம் கொடுத்து வருகிறோம். தமிழ் மக்களது சுய நிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்டுள்ளோம். தமிழ் மக்கள் எந்த விதமான அச்சுறுத்தலுமின்றி தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்க அவர்களுக்குப் பூரண உரிமை உண்டு. அத்தகைய சூழல் ஒன்று உருவாக்கப்படல் வேண்

**சுனந்த:**

எமது பத்திரிகையின் ஆரம்பத்திலிருந்து இன்று வரை இவ்வாறான பேரினவாத கருத்துக்களுக்கெதிராக எழுதி வந்திருக்கின்றோம். குறிப்பாக அன்றைய இனவாதியான சிறில் மத்தியூவிலிருந்து இன்றைய ஜாதிக சிந்தனய, ஹெல உருமய என்பவற்றின் பிதாமகர்களான நளின் டி சில்வா, திலக் கருணாரத்ன போன்றவர்களின் இனவாதக் கருத்துக்களுக்கு ஒரு போதும் இடமளிக்காமல் அது எவ்வளவு தூரம் தவறானது என்பதை சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்லி வந்திருக்கிறோம்.

**சரிநிகர்:**

சுதந்திரமான ஒரு பத்திரிகையை வெளியிடுவதில் உங்களுக்குள்ள நெருக்கடிகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட முடியுமா?

**சுனந்த:**

அரசியல் ரீதியான நெருக்கடியை ஒரு புறம் வைத்துவிட்டுப் பார்த்தாலும் கூட எமது நாட்டில் சுதந்திரமான ஒரு பத்திரிகையை நட்டமின்றி வெளியிடுவது என்பது கடினமான ஒரு விடயம். மற்றைய தேசியப் பத்திரிகைகளுக்கு கிடைக்கும் பத்திரிகைக் கோட்டாவோ, விளம்பரமோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

எமது பத்திரிகைக்கு இல்லை. எனவே இலாபகரமாக பத்திரிகையை வெளியிடுவதாயின் சாதாரண பத்திரிகைகள் போன்று இனவாதம், பாலியல் விவகாரங்கள் போன்ற மலினமான விடயங்களை எழுத வேண்டியிருக்கும். ஆனால் வெறுமனே விற்பனை அதிகரிப்பிற்காக நாம் எமது கொள்கைகளைக் கைவிடத் தயாரில்லை.

மறுபுறத்தில் அரசியல் ரீதியான நெருக்கடி எனும் போது எமது பத்திரிகைக்கு எதிரான நான்கு வழக்குகள் போடப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இதே வேளை அரசாங்கத்தின் அரசியல் வாதிகள், குறிப்பாக ஜனாதிபதி உட்பட நாம் பொய் எழுதுவதாகவும் தமக்கு விரோதமாக பிரச்சாரம் செய்வதாகவும், எமக்கெதிராக நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் மிரட்டி வருகிறார்கள்.

இதுதவிர இன்றைய பத்திரிகையாளர் எந்நேரமும் கத்தி சொருகப்படுவதையோ, இனம் தெரியாதவர்களால் கமெராவும் பிடுங்கி நொருக்கப்பட்டு தாக்குதலுக்குள்ளாவதையோ ஒவ்வொருகணமும் எதிர்பார்த்திருக்க வேண்டிய சூழல் தான் இது என்பது நான் சொல்லாமலே உங்களுக்கு புரியும்.

சிங்கள மொழியில் 65,000 பிரதிகள் விற்பனையாகும் பத்திரிகை 'யுக்திய'. இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தினால் வெளியிடப்படும் இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய. சரிநிகர் பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டி இது.

**சரிநிகர்:**

'யுக்திய' ஒரு சிங்கள முற்போக்குப் பத்திரிகை என்ற ரீதியில் சரிநிகர் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறது?

**சுனந்த:**

எங்களது பத்திரிகை தொடர்பாக தெற்கில் எழுந்த கேள்வி என்னவென்றால் "உங்களது பத்திரிகை எப்போதும் தமிழ் மக்களுக்கு சார்பாக எழுதுகிறது. தமிழ் மக்களை விமர்சிப்பதில்லை. சிங்கள மக்களைத்தான் எப்போதும் விமர்சிக்கிறீர்கள். ஏன் என்பதுதான் அது. அதற்கு நாம் சொன்ன பதில் என்னவென்றால் "எமது வாசகர்கள் சிங்கள மக்கள். அதில் தமிழ் மக்களை விமர்சித்துப் பிரயோசனமில்லை. முக்கியமான விடயம் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் அத்தனை பிரச்சினைகளும் என்னவென்று சிங்கள மக்கள் புரிய வேண்டும். அப்படிப் புரிதல் தான் இனப்பிரச்சினைக்கான ஒரு அரசியல் தீர்வுக்கான உந்துதலாக அமையும். இவ்வாறு தமிழ் மக்களுடைய பிரச்சினைகளையும், அபிலாஷைகளையும் சிங்கள மக்கள் மத்தியில் எடுத்து வருகிற அதே நேரம், எமது சகோதரப் பத்திரிகையான சரிநிகர் தமிழ் மக்கள் மத்தியிலான ஆயுதக் கலாசாரம், கருத்துச் சுதந்திரமின்மை, ஜனநாயக மறுப்பு, தமிழ் இனவாதம், குழுவாதம் போன்ற பிற்போக்கான அம்சங்களை விமர்சிப்பதனூடாகவும், சிங்கள மக்கள் பற்றிய தவறான அபிப்பிராயங்களை நீக்குவது தொடர்பாகவும், தமிழ் மக்களின் ஜனநாயக பூர்வமான வாழ்வியலுக்காகவும் பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இதைத்தான் நாம் நடைமுறையில் செய்து வருகிறோம். இந்தக் கண்ணோட்டத்தில் சரிநிகர் வெளிவருகிறது; தொடர்ந்து வெளிவர வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலகைப் பயமுறுத்தும் நோயரக்கன்!

**எய்ட்ஸ்**

AIDS - Acquired Immune Deficiency System

அனந்தன்

உலகில் மனிதனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சில விடயங்கள் இன்னும் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. இந்த நூற்றாண்டில் மனிதனால் வெற்றி கொள்ள முடியாத பெருநோயான எய்ட்ஸ், நூற்றாண்டு முடிவதற்குள் இன்னும் பலலட்சம் பேரைப் பலியெடுக்க உள்ளது.

இந்த நூற்றாண்டில் மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட நோயான எய்ட்ஸ் பற்றிய அறிவு இலங்கை போன்ற கீழைத்தேய நாடுகளில் பொதுவாகப் பலரிடமும் குறைவாகவே உள்ளது. விஞ்ஞானமும், கல்வி அறிவும் வளர்ந்த மேலை நாடுகளும் இதற்குப் பெரிதும் விதிவிலக்கல்ல.

எய்ட்ஸ் நோய் முன்பே இருந்திருக்கலாம் என்றாலும், 1981இல்தான் உலகின் முதலாவது எய்ட்ஸ் நோயாளி என ஒருவர் அமெரிக்காவில் அறிவிக்கப் பட்டார். எச்.ஐ.வி என்ற வைரசால் பரவும் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் அல்லது குணப்படுத்தும் முறை எதுவும் இன்றுவரை கண்டுபிடிக்கப் படவில்லை. அவ்வகையில் மருத்துவத் துறையில் இது ஒரு பெரும் சவாலாக இருக்கும் நோய் எனலாம். நோய்களுக்கு எதிராகப் போராடும் இயற்கை சக்தி உடலுக்கு உள்ளது. உடலில் எந்த நோய்க் கிருமி புகுந்தாலும் அதை எதிர்த்து உடலிலுள்ள எதிர்ப்புச் சக்தி போராடும். எய்ட்ஸை உண்டாக்கும் எச்.ஐ.வி வைரஸ், உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியையே அழித்துவிடுவதால், எய்ட்ஸ் உண்டான ஒருவர் சாதாரண நோய்களைக்கூடத் தாங்க முடியாத ஒருவராகி விடுகிறார். பலர் நினைப்பது போல எய்ட்ஸ் நோய்க்கிருமிகள் தொற்றிய அனைவரும் உடனடியாக எய்ட்ஸ் நோயின் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டும் என்ற நியதி இல்லை. சிலரை நோய் உடனடியாகத் தாக்கும். சிலரது உடலில் கிருமி பல வருடங்கள் எந்த விளைவையும் ஏற்படுத்தாமல் இருக்கும். இவர்களும், நோயால் பாதிப்புற்ற ஏனையோர் போலவே, எய்ட்ஸைப் பரப்பக்கூடிய அபாயம் உள்ளவர்கள். நோயால் பாதிப்புறாத, ஆனால் நோய்க் கிருமியைக் காவும் நபர்கள் சில சமயங்களில் தாம் நோய்க் கிருமியைக் காவுகிறோம் என்ற உண்மையை அறியாதோராய் இருப்பர்.



www.tamilarangam.net

எய்ட்ஸின் பரம்பல் தொற்றுதல் மூலம் நிகழ்கிறது. உடலில் சுரக்கும் திரவங்கள் அனைத்திலும் எய்ட்ஸ் வைரஸ் காணப்படலாம். ஆனால் குருதி, விந்து, பெண்களின் பாலுறுப்பில் சுரக்கும் திரவம் ஆகியனவே வைரஸைப் பரவச் செய்யக் கூடியன. இத்திரவங்கள் வாய், பிறப்புறுப்புகள், மலவாசல் போன்ற இடங்களில் உள்ள மென்மையான சவ்வுகளினூடாக இன்னொருவருக்குத் தொற்றலாம். உடலுறவு (முறையான மற்றும் முறையற்ற), இரத்தம் ஏற்றல், அசுத்தமான ஊசிகளைப் பயன்படுத்தல் போன்றவற்றால் எய்ட்ஸ் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு.

உடலுழைவு, பசியின்மை, தலையிடி, தொண்டைவலி, தசையுழைவு, மூட்டு நோ, வயிற்றோட்டம், காய்ச்சல், இரவு வியர்வை, இருமல் போன்ற ஏதாவது சாதாரண அறிகுறிகள் எய்ட்ஸ் நோயின் ஆரம்பத்தில் தோன்றும். இடையில் அறிகுறிகள் இல்லாமல் சுகதேகி போல இருக்கும் நோயாளிக்கு, நோயின் அடுத்த கட்டம் நெறிகள் போடுவதன் மூலம் தெரியும். இந்த நெறிகள் நீண்ட காலம் இருப்பின் எய்ட்ஸ் என நம்பச் சாத்தியங்கள் அதிகம். எனினும் இரத்தப் பரிசோதனை மாத்திரமே எய்ட்ஸ் நோய் உண்டாகியிருப்பதை உறுதி செய்யக் கூடியது. நீடித்த வயிற்றோட்டம் அல்லது காய்ச்சல், 10%க்கு மேற்பட்ட உடல் எடை இழப்பு என்பன எய்ட்ஸின் முக்கிய அறிகுறிகள்.

எய்ட்ஸ் பற்றிய பயங்கள் அதிகமானவை. இதனால், எய்ட்ஸால் பாதிக்கப் பட்டவர்களை எவரும் அணுகுவதோ, தொடர்பு கொள்வதோ கிடையாது. இவ்வாறு செய்வது மிகத் தவறானது. ஒருவர் எய்ட்ஸ் நோயாளியுடன் வசிப்பதாலோ, தொகுவதாலோ, அவரது உடையை, மலசலகூடத்தைப் பாவிப்பதாலோ, ஒரே இடத்தில் பணிபுரிவதாலோ எய்ட்ஸ் தொற்றுவதில்லை. இரத்ததானம் செய்வதாலும் எய்ட்ஸ் தொற்றாது. பாலூட்டுவதாலும் எய்ட்ஸ் தொற்றுவது நிரூபிக்கப் படவில்லை. முத்தமிடுவதாலும் (வாயில் காயங்கள் இல்லாவிடின்) தொற்ற வாய்ப்பில்லை.

எய்ட்ஸை விலக்குவது இலகுவானது. நீங்கள் உடலுறவு கொள்ளும் நபர் (ஆண் / பெண்) எய்ட்ஸால் பாதிக்கப்படாதவர் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அவ்வாறு உறுதி செய்ய முடியாவிடின் கருத்தடை உறைகளை (condom) பாவியுங்கள். பலருடன் உடலுறவு கொள்பவருடன் உடலுறவு கொள்ளாதீர்கள். இரத்தம் ஏற்ற வேண்டிய அவசியம் ஏற்பட்டால் ஊசியும், இரத்தமும் எய்ட்ஸ் பாதிப்பு இல்லாதது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்களுக்கு எய்ட்ஸ் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக அதை மற்றவர்களுக்குத் தொற்றாது தடுக்கும் வழிவகைகளை மேற்கொள்ளுங்கள்.

எய்ட்ஸ் பற்றிய தகவல்கள் எல்லா மருத்துவ நிலையங்களிலும் கிடைக்கும். எய்ட்ஸ் உருவாகியிருப்பது பற்றிய சந்தேகம் இருப்பின் உடன் வைத்தியரை நாடுங்கள்.

(இக்கட்டுரையில் உள்ள பெரும்பாலான தகவல்கள் டொக்ரர் எம்கே.முருகானந்தனின் ‘எயிட்ஸ்’ என்ற நூலைத் தழுவியவை)

** உலகில் எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வருடாந்தம், டிசம்பர் மாதத்தில் உலக எய்ட்ஸ் தினம் கொண்டாடப் படுகிறது. எய்ட்ஸ் பற்றிய விபரங்களைப் பரப்புவது இந்தத் தினத்தின் முக்கிய நோக்கம்.*

** உலகில் மிக அதிகளவில் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப் பட்டவர்கள் மூன்றாம் உலக நாடுகளிலேயே*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Juss-Buss
Juss-studentenes rettsinformasjon
St. Olavsgt. 29 - 0166 Oslo 1
Sentralbord 02 11 10 52
Telefax 02 11 61 77

Oslo, den 15-12-92
Vår ref.: 500/FG

# இலவச சட்ட உதவி செய்யும் மாணவர்கள்

பலருக்கு சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படுமிடத்து உடனடியாகச் சட்டத்தரணியை நாடுவது இயல்பு. ஆனால் அவ்வாறு நாடும் ஒவ்வொரு தடவையும் பெரும்தொகைப் பணத்தை – சில சமயங்களில் அநாவசியமாக – செலவிட நேரிடுகிறது. இவ்வாறு அநாவசியச் செலவினத்தை நீங்கள் தவிர்க்க, சட்டத்துறை மாணவர்கள் உதவுகின்றனர்.

சட்டத்துறை மாணவர்களது அமைப்பான 'யுஸ் – புஸ்' உங்களது பல சட்டரீதியான பிரச்சனைகளுக்கு இலவச சட்ட ஆலோசனை தருகிறது. இவ்வாறான 'யுஸ் – புஸ்' அமைப்பில் வெளிநாட்டவர்களது பிரச்சனைகளைக் கவனிக்கவென ஒரு பிரிவு பிரத்தியேகமாக இயங்குகிறது. வெளிநாட்டவர் என்ற ரீதியில் நீங்கள் கொண்டிருக்கும் பிரச்சனைகள் மற்றும் உங்களது உரிமைகள், வீடு வாங்குவதில் மற்றும் சமூக ரீதியான, வேலை ரீதியான, கடன் ரீதியான, சிறை அல்லது சட்டத் தண்டனைகள் ரீதியான சிக்கல்கள் உங்களுக்கு இருப்பின் நீங்கள் 'யுஸ் – புஸ்'ஐ நாடலாம்.

சென்.ஊலாவ்ஸ் காத(29)வில் உள்ள 'யுஸ் – புஸ்' அலுவலகத்தில் திங்கள் தோறும் காலை 10மணி முதல் 15மணிவரை, உங்களது பிரச்சனைகளைப் பற்றிய ஆலோசனைகளை நீங்கள் பெறலாம் அல்லது மேலுள்ள முகவரியில் கடிதமூலம் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசியிலும் உங்களது பிரச்சனைகள் தொடர்பான ஆலோசனைகளைப் பெறலாம்.

குடும்ப மீளிணைவு, வேலை – வதிவிட அனுமதி, மாணவர்களது (சட்டரீதியான) பிரச்சனைகள், நிரந்தர வதிவிட அனுமதி (Bosettings tillatelse), பிரஜாவுரிமை போன்ற பிரச்சனைகளில் 'யுஸ் – புஸ்'இன் வெளிநாட்டவர்க்கான பிரிவு அதிக கவனம் எடுக்கிறது. உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவைப்படுமிடத்து, அதனைப் பெறுவதற்கான உதவியையும் 'யுஸ் – புஸ்' வழங்கும்.

('யுஸ் – புஸ்'இன் பத்திரிகைக் குறிப்பிலிருந்து)

உள்ளனர். முக்கியமாக ஆபிரிக்க நாடுகளில் பலலட்சம் மக்கள் எய்ட்ஸ் நோய் காரணமாக உயிரிழக்க உள்ளனர். பெருமளவில் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதற்காக விபச்சாரத்தை ஊக்குவிக்கும் தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் எய்ட்ஸ் வேகமாகப் பரவிவருகிறது. இந்த வரிசையில் இலங்கையும் விரைவில் இடம்பிடிக்கும் அபாயம் உள்ளது●

(சென்ற இதழ்த் தொடர்)

# எதுவரை தொடரும் மனிதரின் கதை?



GÜNTER GRASS

ஜேர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்;
ந.சுசீந்திரன்

தங்கள் ஆத்மாவைப் பூரண திருப்திப் படுத்தக்கூடியதாக எழுதப்பட்டால், நிச்சயமாக, அரச அதிகாரமோ, மடாலய அதிகாரமோ மகிழச்சி அடைவார்கள். 'கலை கலைக்காகவே' என்று கலைஞர்கள் தங்களின் சுயதிருப்திக்காகப் படைக்கின்ற ஆபத்தில்லாத படைப்புகளைவிட ஏனையவற்றை இவர்களால் சகிக்க முடியாது. எப்போதும் மனித வாழ்க்கையின் யதார்த்தமான போக்குகள் சீரழிந்து விடுகின்றபோது 'கலை கலைக்காகவே' என்ற வாதம் நாகரிகமாக உருவெடுக்கிறது. உண்மையில் இன்று நாற்றமடிக்கின்ற யதார்த்தம் உள்ளடக்கத்தை விட்டுவிலகி, வடிவ வாஞ்சைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. பார்க்கப் போனால் நிறம் பற்றியோ, சுருதி பற்றியோ, மொழியழகு பற்றியோதான் இறுதியில் பிரஸ்தாபிக்கப் படுகிறது. உட்பொதிவு இல்லாமல் வெளி அழகு ஜெயிக்கிறது. இதனால் தணிக்கைக்கோ தடைக்கோ பெரியதொரு அவசியம் ஏற்படுவதில்லை. நவீனத்துவத்திற்குப் பிந்திய காலகட்டத்தில் எல்லாம் விரும்பியவாறு நடப்பதால் தணிக்கைகள் அதிகம் பயன்படுவதில்லை. கரைச்சல் இல்லாத இலகுவாகக் கையாளக்கூடிய, தமது கைகளை முத்தமிடத் தருகின்ற நோஞ்சான் இலக்கியங்கள், இவைதான் இந்த ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படுகிறது.

இருந்தாலும் ஏனைய எழுத்தாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். இந்த எழுத்தாளர் பலருடைய படைப்புகள் இலகுவானதாகவும், தமாஷாகவும் எழுதப்பட்டாலும், வார்த்தைகள் அவை பல அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியவை. உயர்பீட மடாலய மீட்பர்களுக்கோ ஒரு வார்த்தை ஒரு கருத்தை மட்டும்தான் தரவேண்டும். அது இல்லாதபோது அவர்களின் கோபத்தை உயிரைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும் என்ற வாதம் இந்த விடயத்தை மழுங்கடிக்கலாம்.

இது கடைசியுமல்ல, இலக்கியவாதிகளுக்கிடையிலான இழுபறிகள் எங்களுக்கிடையில் மேலும் விரிசலை ஏற்படுத்தலாம். அதுவே சல்மான் ருஸ்டியைக் காட்டிக் கொடுக்கக் காரணமாகவும் அமையலாம். தாம் விரும்பும் இலக்கியப் படைப்புக்கு எம்மை நிர்ப்பந்திக்கலாம்.

இந்த விடயத்தை நான் மிகவும் சுருக்கமாகவே இங்கே முன்வைக்கிறேன் என்பதை நீங்கள் விளங்கிக் கொள்வீர்கள். இலக்கிய வரலாறு என்பதே, அதன் பிரத்தியேகமான தணிக்கை அத்தியாயத்தை எடுத்துக் கொண்டால், சின்ன அல்லது பெரிய காட்டிக் கொடுப்புகளின் சரித்திரமே. விட்டுக்கொடுப்பிற்கான எங்கள் கூக்குரல் ஒருபோதும் கட்டுப்படுத்தும் எதிர்க்குரல் இல்லாமல் இருந்ததில்லை என்பதை 17ஆம் 18ஆம் நூற்றாண்டில் முகிழ்த்த ஐரோப்பிய 'அறிவொளி இயக்கத்தின்' எழுச்சியால் விவேகமாகியும், அதன் ஆளுமைக்குட்பட்டும் போன மைந்தர்களை நாம் நன்றாகவே அறிவோம்.

என்ன செய்வதென்று அடிக்கடி தெரியாது இறுதியாகப் பகுத்தறிவின் அடிப்படையில் மன்னிப்பை வேண்டிநின்ற சல்மான் ருஸ்டிக்கு எங்கள் முன்னோடி Michel de Montaigne அவர்களின் எழுத்துக்கு என்ன நடந்ததென்று தெரியவேண்டும். கத்தோலிக்க நிர்வாகம் அவன் எழுத்தைத் தடைசெய்தது. கணிதமேதை, சமயத் தத்துவவியலாளன் Pascal (1623 - 1662) உம் கத்தோலிக்கச் சீர்திருத்த இயக்கத்தைச் சேர்ந்த Jansenisten -

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தப் படைப்புகள் சம்பாதிக்கின்றன.

இந்த வகையில் சல்மான் ருஸ்டி இன்று எம்மை ஒன்றாக்கியுள்ளமை மிகவும் அரிதாக நடைபெறக்கூடிய ஒரு விடயம்தான். இதனை நாம் எமக்கேற்பட்ட பிரச்சனையாக விளங்கிக்கொள்ள வேண்டுமென்பதை அவருக்கு ஏற்பட்ட நிலைமைகள் நம்மை எச்சரிக்கை செய்கின்றன. இந்த எழுத்தாளனை மிரட்டுவோர் எம்மைத்தான் மிரட்டுகிறார்கள். அவனை ஊமையாக்கி உயிரைப் பறித்துவிட விரும்புவோர் இறுதியில் எம்மையும் எம் குரலையும் உயிரையும் காவுகொள்ளவே என்பது எமக்குப் புரிகிறது. சல்மான் றுஸ்டியுடன் சேர்ந்து நாம் எல்லோருமே எச்சரிக்கப் படுகிறோம்.

இவரது நூலை ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்தவர் கொல்லப் பட்டிருக்கிறார். இத்தாலிய மொழிபெயர்ப்புச் செய்தவர் தாக்கப்பட்டுத் துன்புறுத்தப் பட்டிருக்கிறார். இவர்களையும், றுஸ்டியுடன் சேர்த்து ஆபத்திற்கு முகங்கொடுக்கும் அனைவரையும் நாம் மறந்துவிட முடியாது, மறந்துவிடக் கூடாது.

உயர்பீட மடாதிபதிகளின் அதிகாரத்தை நாம் உடைத்தெறியப் போவதில்லை. அவர்கள் விதித்த மரணதண்டனையை நாம் இரத்துச் செய்ய முடியாது. கொல்வதற்கு அவர்கள் கொடுக்கும் அவர்கள் கொடுக்கும் சன்மானத் தொகையை நாம் இல்லாமற் செய்துவிட முடியாது.

அரசியல்வாதிகளோ, தொழில் அதிபர்களோ தங்கள் வியாபாரத்தையும், புறமொதுக்கி இது விடயத்தில் தலையிடப் போவதில்லை. தியமென் சதுக்கப் படுகொலைகளுக்குப் பின்னரும் எவ்வாறு சீன அரசுடன் சுமுகமாக வியாபாரங்கள் செய்யப் படுகிறதோ அவ்வாறே ஈரானுடனான வியாபாரத்திலும், அதனால் கிடைக்கும் லாபத்திலுமே இவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். சிலவேளை தங்கள் தங்கள் இடங்களில் தொலைக்காட்சிகளில் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கக் கூடும். இதோடு இவர்கள் எதிர்ப்பு முடிந்துவிடும்.

றுஸ்டிக்கும் அவரது நூலை மொழிபெயர்ப் பவர்களுக்கும் விதிக்கப்பட்ட மரணதண்டனையின் அநியாயம் கால உதிர்வில், நாளாந்தக் கொலைகளில் எமது அக்கறையை வேறெங்கோ கரையொதுக்கி விடலாம். வருடாந்தம் உலகின் ஏழ்மைப் பரப்பான மூன்றாம் உலகின் குழந்தைகளை மில்லியன் கணக்கில் கொள்ளை கொள்ளும் பட்டினிச் சாவுகள், முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத பிரச்சனையாய் பட்டினி என்பது பாலகர் கொலையாகச் சட்டப் பிரகடனம் செய்தாற்போல் இருக்கின்றபோது, தனியொருவனின் ஜன்சனிஸ்டுகளும் அது சரிதான் என்றார்கள். 'அறிவொளி இயக்க' எழுச்சியின் மூலவர்களான பிரெஞ்சுத் தத்துவவியலாளன் - ஒரு யுகத்தின் எழுத்தாளர் Voltaire (1694 - 1778)உம் மற்றவர்களும் இவன் எழுத்தைப் போற்றிப் புகழ்ந்தார்கள். ஆனால் பிரெஞ்சுத் தத்துவவியலாளர், 'அறிவொளி' இயக்கவாதி Roussou (1712 - 1778, அறிவின் ஆட்சி குறித்த இவரின் கோட்பாட்டில் இவற்றின் கொடூரம், பிரான்சியப் புரட்சியின் ஆரம்பத்தின் பின்னால் அதிபயங்கரவாதமாக வெளிக்கிளம்பியது.) இயற்கை நீதியினதும் வழக்கமான மரபுகளினதும் அடிப்படையில் இன்னும் உறுதியாகச் சொல்லப் போனால் இன்றுவரை ஆட்சிபுரியும் இந்த மரபுகளின் அடிப்படையில் Montaigneவின் படைப்பை நிராகரித்தார்.

புத்திஜீவித வலிப்புக் குணத்திற்கு வேண்டுமானால் விசேடமாக ஜெர்மனியில் பாடம் கற்ற இன்னுமோர் உதாரணத்தைக் கூறலாம். Heinrich Heineக்கும் August Von Platenக்கும் (1796 - 1835; ஜேர்மன் மொழிக் கவிஞர், நாடகாசிரியர்) இடையில் நிகழ்ந்த சண்டைகள், இரண்டு உயர்ந்த படைப்பாளிகள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காமல் தன்னினச் சேர்க்கையாளன் என்றோ யூதன் என்றோ ஒருவர்மீது மற்றொருவர் வக்கரித்த சேற்றை வாரியிறைத்தார்கள். இந்த வார்த்தையாடல்களில் Heineயின் கூர்மையான வார்த்தைகள் இறுதியில் August Von Platenஐச் சாகடித்தன.

நாங்கள் எழுத்தாளர்கள் தவறுவிட மாட்டோம் என்று கூறவில்லை. உலக இலக்கியம் என்பது புனிதமானவர்களால் உருவாக்கப் பட்டதுமல்ல. நாங்கள் பல்லாண்டு நெடுகிலும் பயமுறுத்தப் பட்டிருந்தாலும் தடையாலும், தணிக்கையாலும் துன்பப் பட்டாலும், அனைத்துக்கும் முகங்கொடுத்து, நுட்பமான தேடலாலோ அல்லது தன்முனைப்பு ஆர்வத்தினாலோ வார்த்தை விளைநிலங்களைப் பெருக்கியுள்ளோம். எங்களை அர்ப்பணித்து நாங்கள் தியாகிகளாக வேண்டுமென்று கடவுள் அசரீரி எதுவும் எங்களுக்குக் கட்டளையிடவில்லை. இருப்பினும் சரித்திரத்தால் தாக்கப்பட்ட எழுத்தாளர்களைச் சமூகம் எப்பொழுதும் காலக் கரைவிற்குப் பின்னால் விருப்போடு தியாகிகளாகத் தன்னகத்தே சுவீகரித்துக் கொள்கிறது. ஒன்று மட்டும் உறுதி; நாங்கள் ஆர்வத்தோடு இழிவுபடுத்துகிறோம். இந்த வரிசையில் உட்கார்ந்திருக்கும் போது நக்கலாகக் கதைக்க விருப்பமிருக்கும். தாம் தவறே விடமாட்டோம் என்றெண்ணுபவர்களைப் பார்த்து நகைக்கிறோம். யாராவது ஒரு எழுத்தாளர் ஒரு மதபோதகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாதிரிப் பிதற்றினால் கூச்சத்தோடு சிரித்துக் கொள்கிறோம். எழுத்துப் படிவங்கள் ஒவ்வொன்றிலும் பொறுமையான எங்கள் விடாமுயற்சி யாவரும் அறிந்ததே. அதேவேளை வழக்கமாகவே நாங்கள் உதிரிகள், இந்த உதிரிகளின் சக்தியும் பொறுமையும் இன்னும் அதிக காலத்திற்கு வேண்டுமானால் மேலும் தொடர்ச்சியாக சல்மான் றுஸ்டியைப் பாதுகாக்கப் பயன்பட மாட்டாதா?

இப்பொழுது எழுத்தாளர்கள் றுஸ்டிக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இவை அங்காங்கே அனேக தினசரிகளில் பிரசுரமாகின்றன. இது உலகம் முழுக்கப் பரவவேண்டும்; உலகெங்கினுமுள்ள எழுத்தாளர்கள் இவ்வாறு எழுதுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம். முதலில் எழுதப்பட்ட கடிதங்களில் ஐரோப்பிய அடியைச் சேர்ந்த தென்னாபிரிக்க சமூக ஆய்வு நாவலாசிரியை, கடந்த ஆண்டு நோபல் பரிசுபெற்ற எழுத்தாளர் **Nardine Gordimer (1923)** அவர்களின் கடிதத்தில் 'நீங்கள் உங்கள் நூலில் வருகின்ற எந்தப் பாத்திரத்தினூடாகவும் இரத்தக் களரி ஏற்பட வேண்டும் என்று கேட்டதுமில்லை; விரும்பவுமில்லை. இவை விளங்கிக் கொள்ளப்படாமலேயே உங்கள் உயிரைப் பறிக்க நினைப்பது, மனிதகுலத்திற்கு எதிராகச் செய்யப் பட்ட அநீதி. இந்த மண்ணின் எப்பாகத்திலும் அடக்குமுறையை மீறி சுதந்திரமான இலக்கியப் பரப்பில் இது தன் நிழலைப் பதித்தே தீரும்' என்று குறிப்பிட்டுள்ளார். இதைத்தான் நாமும் விரும்பி வேண்டி நிற்கிறோம். கலை இலக்கியத்தின் நெகிழ்ச்சியான மரபுக்குள், எப்பொழுதும் புதிய மரபுகளையே நாடுகின்ற சுதந்திரமான படைப்புகள் எழுதப்பட வேண்டும். உண்மையில் மற்றவர்களால் எது முடியாதோ அதைத்தான் நாம் விரும்புகிறோம்! அப்படித்தானே சல்மன்!

- கதை சொல்லுதல், பழைய கதைகள் அதனை என்றும் வேறு வகையிற் சொல்லுதல் - எங்களின் இந்தக் கதைகள் வெளிப்படையாகச் சொல்லப்படுவது மட்டுமல்ல, எல்லோர் முன்னிலையிலும் திறந்து வைக்கப்படுகிறது. சரியாகச் சொல்லியிருக்கிறேன் என்ற இறுமாப்பிலோ, திமிர்த்தனத்திலோ அல்ல, மாறாகத் தோல்வியின்/ வீழ்ச்சியின் பரிகசிப்பில் அவை வாழ்கின்றன. கதை சொல்பவன் ஒருபோதும் வெற்றியாளனின் பக்கம் நிற்கமுடியாது. இழப்புகளிலேயே அவன் வாழ்கிறான். என்றும் தோல்விகளிலேயே அமிழ்ந்து போனவர்கள் தமது தோல்விகளை அவனால் சுமத்திவிடலாம். ஏதோவொரு பட்டஞ் சூட்டி, குரல்வளை நெரிப்புக்கு நியாயம் தேடுவது முல்லாக்களுக்குக் கைகூடியிருக்கலாம். இன்னும் துரிதமாக, இந்தக் கதை சொல்பவனின் குரல்வளையை நெரித்தும் விடலாம். அப்போது மனிதர்களின் கதையைச் சொல்வதற்கு ஆள் இல்லாமற் போகுமென்பதல்ல, அதோடு மனிதர்களின் கதையே முடிந்து விடுகின்றன.

## ரயர் செய்த குற்றம்!

கடந்த வருட இறுதியில் சமத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டிற்காக, உலகப் புகழ்பெற்ற யொகஹாமா ரயர்கள் பல நாடுகளில் இருந்து மீளப் பெறப்பட்டன. இந்த ரயர்களில் 'அல்லாஹ்' என அரபியில் எழுதப் பட்டிருந்ததாக சவுதி அரபியாவால் டிசம்பரில் குற்றம் சாட்டப் பட்டது. ஜனவரியில் அவ்வாறு பெயர் எழுதப்பட்ட அனைத்து ரயர்களையும் மீளப் பெற்றது நிறுவனம். பின்பு குவைத், யூ.ஏ.இ, புருணை, ஓமான், பாஹ்ரெய்ன், பாகிஸ்தானிலும் இந்தப் பிரச்சனை கிளப்பப் பட்டதைத் தொடர்ந்து அந்த நாடுகளில் இருந்தும் ரயர்கள் மீளப் பெறப்பட்டன.

- ராகவன் -


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பலமொழி பேசும் ஒரேவகைத் திரைப்படங்கள்!

-றீனா-

நோர்வேஜியத் தேசியத் தொலைக்காட்சி (NRK) பல நல்ல திரைப்படங்களை வழங்குவதை, ஒழுங்காகத் தொலைக்காட்சி பார்க்கும் யாரும் அறியமுடியும். வார நாட்களில் ஒளிபரப்பாகும் திரைப்படங்களில் ஒன்றோடொன்று தொடர்பான படங்களை ஒரு தொடர்போல ஒளிபரப்பாக்குவதும் இந்த நிலையத்தின் வழமை. சில காலம் முன்னதாக காதலை அடிப்படையாகக் கொண்ட பத்துத் திரைப்படங்கள் பத்து வாரங்கள் தொடர்ச்சியாக ஒளிபரப்பாயின என்பது பலருக்கு நினைவிருக்கலாம். இந்தத் திரைப்படங்களில் ஒரு சிறப்பம்சம் என்னவெனில், இவை பல்வேறு நாடுகளில் தயாரிக்கப்பட்ட வெவ்வேறு மொழிப் படங்கள் என்பதுதான்.



இந்த வகையில் அண்மையில் பெண்களைப் பற்றிய கதைகளை அடிப்படையாகக் கொண்ட ஆறு திரைப்படங்கள் வியாழன்தோறும் இரவுகளில் ஒளிபரப்பாக உள்ளன. இவை புர்கினா ஃபாஸோ, பிரான்ஸ், இங்கிலாந்து, ஹங்கேரி, இந்தியா ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட படங்களாகும். இவற்றில் முதலாவது திரைப்படமான, 'ஒறோக்கியாவின் கதை' பார்க்கக் கிடைத்தது. புர்கினா ஃபாஸோ என்ற ஆபிரிக்க நாட்டில் (கேள்விப்பட்டதே இல்லையே) தயாரிக்கப்பட்ட இந்தத் திரைப்படம் சர்வதேச ரீதியில் பெரும் பாராட்டுகளைப் பெற்றது.

தனது விருப்பிற்கு மாறாக ஒருவனுக்கு 'மணமுடித்து' வைக்கப்படும் ஒறாக்கியா என்ற பெண்ணின் கதையே இத்திரைப்படம். ஒறாக்கியா விரும்பும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இளைஞனின் குரலுடன் ஆரம்பமாகும் இத்திரைப்படம் அவனது குரலுடனேயே முடிகிறது. இது, சில நாடகங்களில் கதை சொல்வோன் என்ற பாத்திரத்தை நினைவுபடுத்தியது. தமிழ்த் திரைப்படங்களில் 'அழியாத கோலங்களி'ல் இவ்வாறு இருந்ததாக நினைவு. தனக்குப் பிடித்தவனை மணமுடிக்க அனுமதி மறுக்கப்படும் ஒறாக்கியா, தனது காதலனுடன் ஊரைவிட்டே ஓடிவிடுகிறாள். வேறு கிராமத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்ட ஒறாக்கியா அங்கு இருக்கையில், தகப்பனிடம் ஒறாக்கியாவை 'வாங்கிய' கணவன், பொலிஸ் அதிகாரிகளின் உதவியை நாடுகிறான். ஒறாக்கியாவின் காதலனிடம் லஞ்சம் வாங்கிய அதே அதிகாரி அவளது கணவனிடமும் லஞ்சத்தை வாங்குகிறான். ஒறாக்கியாவின் காதலனைச் சிறைப்படுத்தி அவள் வாழும் ஊரில் கொணர்ந்து காட்டி, அவள் சரணடையாவிடின் காதலனைச் சிறையில் இடுவதாக மிரட்டி, மீட்டு வருகிறது பொலிஸ்.

தனது கணவனுடன் வாழ விரும்பாத ஒறாக்கியா, கணவனது நிர்ப்பந்தங்கள் கொடுமைகள் தாங்க முடியாமல் அவனுக்கு நஞ்சூட்ட முயல, அது கணவனின் சகோதரனின் உயிரைப் பலியெடுக்கிறது. ஒறாக்கியாமீது கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, அவளுக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப் படுகிறது. சிறையில், அரசாங்கத்தில் பெரும் செல்வாக்கு உடைய அதிகாரி ஒருவனது ஆசைக்கு இணங்கி, அவள் ஒரு குழந்தையைப் பெறுகிறாள். இதன்பின் வேறொரு கைதியுடனான உறவும், அவளுக்கு ஒரு குழந்தையைத் தருகிறது. இவற்றையெல்லாம், தனது காதலனுடன் மீண்டும் சேரலாம் என்ற நம்பிக்கையிலும், சிறைத் தனிமையிலும் அவள் செய்கிறாள். இறுதியில் தனது சிறைவாசம் முடிந்ததும் தனது காதலனுடனேயே வாழ்கிறாள் ஒறாக்கியா. பழைய கணவன் அவளை இடையிடையே பார்க்க விரும்பினாலும் அவனது இடையூறு எதுவும் இல்லாமல் அவர்களது மணவாழ்வு தொடர்கிறது எனக் காதலனின் குரலுடன் படம் முடிகிறது.

படத்தில் தனது கணவனுக்கு நஞ்சூட்டுவதற்காக, ஒரு மாந்திரீகனிடம் சோரம் போகிறாள் ஒறாக்கியா. பின்பு, அவளைச் சுதந்திரம் தருவதாக ஏமாற்றும் சிறை அதிகாரியிடமும், சக கைதியிடமும் அவள் தன்னை இழக்கிறாள். ஆனால் இந்தக் காட்சிகள் எவையும் படத்தில் வராமலே உணர்த்தப் படுகின்றன. படம்



ஒறாக்கியாவாக மாகறீற்றா செள

முடிகையில் இயல்பாகவே ஒறாக்கியாவின்மீது ஒரு அனுதாபத்தை உணர முடிகிறது. இது திரைப்பட நெறியாளரின் வெற்றி என்றே கூறலாம். காட்சிகள் எதுவித செயற்கைத் தனமுமின்றிக் கண்முன்னே நிகழ்வது போன்ற உணர்வை ஏற்படுத்துவது இலகுவான ஒன்றல்ல. இத்திரைப்படத்தில் அவ்வாறான தன்மையைப் பார்க்கலாம்.

இந்தத் திரைப்படத்தில் முக்கிய வேடமான ஒறாக்கியாவை ஏற்றிருப்பவர் மார்கறிற்றா செள. பிரெஞ்சுத் திரைப்பட இயக்குனரான ஜாக்குயிஸ் ஒபென்ஹெய்ம் உடன் இணைந்து திரைப்படத்தை இயக்கியிருப்பவர் ஜேக்கப் செள. நல்ல திரைப்படங்களைத் தயாரித்துள்ள ஒரு நாடான புர்கினா ∴பாஸோவில் இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்கனவே இரு திரைப்படங்களை நோர்வே தேசியத் தொலைக்காட்சி காண்பித்துள்ளது. அவை போலவே 'ஒறாக்கியாவின் கதை' திரைப்படமும் நோர்வே ரசிகர்கள் பலரைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

'ஒறாக்கியாவின் கதை' திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம் இந்த வரிசையில் வரவுள்ள ஏனைய திரைப்படங்கயையும் பார்க்க என்னைத் தூண்டியுள்ளது. சில வருடங்கள் முன்னர் அர்ச்சனாவுக்கு இரண்டாவது தடவை தேசிய விருது வாங்கித்தந்த தெலுங்குப் படமான 'தாசி' இந்த வரிசையில் பெப்ரவரி 4ஆம் திகதி ஒளிபரப்பாக உள்ளது. பார்ப்போம், ரசிப்போம்●

ஊர்க்குருவி



# விவாகம் - விவாகரத்து - விபரீதங்கள்

இன்றைய சமூக அமைப்பில் குறிப்பாக ஐரோப்பிய சமூக அமைப்பில் உள்ள பிரச்சனைகளில் குறிப்பிடத்தக்க பிரச்சனையாக மணவாழ்வில் ஏற்படும் பிரச்சனைகள் உள்ளன. இந்தச் சமூகங்களில் கடந்த சில நூற்றாண்டுகளாக கணிசமான அளவில் மணவாழ்வில் பிரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. மணவாழ்வு முறிவு என்பது இச்சமூகத்தில் மிகப்பெரிய சிக்கலாகவும் பாரிய அழுத்தங்களுக்கும் காரணமாக உள்ளன. இத்தகைய பிரச்சனை நோர்வேயையும் விட்டுவைக்கவில்லை.

1990ஆம் ஆண்டில் எடுத்த கணக்கீட்டின்படி 43% திருமணங்கள் முறிவடைந்துள்ளன. (அ-து 10170 விவாகரத்துகள்) கடந்த வருடம் இத்தொகை 930ஆல் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் விவாகரத்தான குடும்பங்களில் 80% குடும்பங்கள் ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்டவை. இதனால் 15700 பிள்ளைகள் விவாகரத்தால் பாதிக்கப் பட்டுள்ளனர். இப்பிள்ளைகளில் 10,400 பேர் 18 வயதுக்கு உட்பட்டோராவர்.

1980ஆம் ஆண்டைவிட 1990இல் விவாகரத்து எண்ணிக்கை 3500ஆல் அதிகரித்துள்ளது. இவற்றில் அதிகம் விவாகங்களும் விவாகரத்துகளும் 25முதல் 29வயதுக்கு இடைப்பட்டோரிடையேயே நிகழ்கின்றன. விவாகரத்தில் 17%மானவை 5வருடத்திற்கு உட்பட்ட மணவாழ்வு கொண்டவையாகவும், 26%மானவை 5 முதல் 10 வருட மணவாழ்வுக்குப் பின்னானவையாகவும் உள்ளன.

இதுபற்றி சமூக ஆய்வாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இத்தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், கடந்த 15 வருடங்களாக இவ்வதிகரிப்பு மிகக் கூடுதலாக இருப்பதாகவும், விவாகரத்தினால் அதிகம் பிள்ளைகளே பாதிக்கப் படுவதாகவும் கூறியுள்ளார்●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முல்லை அமுதனின் (ஈழம்) இரு கவிதைகள்

## I

உன் –
மூச்சுக் காற்றும்
கைப்பற்றப்படலாம்.
கைகுலுக்கிக் கொண்ட
பொழுதுகளில் –
அவர்களின் வருகை
உன்னையும் ஆக்கிரமிக்கும்.
கண்ணில் –
அழுகை முளைக்கும்
தானாகவே ஜன்னல்கள்
மூடிக்கொள்ளும்.
கைது செய்யப்பட்டிருப்பாய்.
பிறகு
அவர்கள் –
பசிக்கு நீ உணவாவாய்.
எங்கள் –
சிவப்பு மண்ணை மேலும்
சிவப்பாக்க
குருதி நனைக்கும்.
பிறகு உன்னை
யாவரும் மறப்பர்.
மீண்டும் –
இன்னொரு இழப்பிற்கு
தெருக்களும்
தயாராகும்.

3–8–92

## II

உனக்கென்ன?
ஊருக்கு எது நடந்து என்ன?
நிம்மதியாக நீ தூங்கு!
உன் நிம்மதிதானே
பெரியது.
அவர்கள் வருவர்
நினைத்ததை
இழுத்து வீதியில் போட்டு
மிதிப்பர் அல்லது சாப்பிடுவர்.
பிறகு,
இன்னொரு
தெருநோக்கி அணிவகுப்பர்.
'நீ புலியா?'
என்று
அம்மாவை அழிப்பர்.
தங்கையைக் கற்பழிப்பர்.
அண்ணன் –
காணாமலே போய்விடுவான்.
உனக்கென்ன?
ஊருக்கு எது நடந்து என்ன?
நிம்மதியாக
நீ தூங்கு....
உன்னையும் அவர்கள்
இழுத்து –
நீ காணாமல் போகும்வரைக்கும்
நீ –
நிம்மதியாகத் தூங்கு
உனக்கென்ன?

3–8–92



## வன்முறையால் சிறைவாசம்!

இரு வருடங்களுக்குமுன் இனவாத அமைப்பான எ:ப்.எம்.ஐ.யின் தலைவராக இருந்தபோது வன்முறையில் ஈடுபட்டமைக்காக ஆண மிய்)ர்டால் நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டு ஏழு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளார்.

தற்போது என்.எம்.ஐ. என்ற இனவாத அமைப்பில் தலைவராக உள்ள மிய்ர்டால், 90ஆம் ஆண்டு நடத்திய ஒரு கூட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்ய பஸ்களில் வந்த இனவாதத்திற்கு எதிரானவர்களைத் தடிகள் மற்றும் சிறு ஆயுதங்களால் தாக்கினார். இதில் இவரது ஆதரவாளர்களும் பங்கெடுத்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தையடுத்து மிய்ர்டால் தலைமறைவாகியிருந்தார். அண்மையில் இந்தத் தாக்குதல்கள் தொடர்பான வழக்கு முற்றுப் பெற்று, மிய்ர்டாலுக்கு ஏழு மாதச் சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தேசிங்குராஜன்**

# தொலைந்துபோன தேசம் பற்றிய சிலகுறிப்புகள்

ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருந்த, இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது 'ஏமாற்றுக் கைங்கரியத்தை'த் தமிழ் மக்கள்மீது திணிக்க முயற்சித்து வருகிறது. 1992 டிசம்பருக்குள் தெரிவுக்குழு இனப்பிரச்சனைக்கான தீர்வைக் 'கண்டுபிடித்துவிடும்' என்ற அரசியல்வாதிகளின் பேச்சுகள் காற்றில் பறக்கவிடப் பட்டுள்ளது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் இந்தத் தெரிவுக்குழுவின்மீது எந்த நம்பிக்கையையும் கொண்டிருக்கவில்லை. பிரச்சனையை மேலும் இழுத்தடிக்கவும், இனப்பிரச்சனை தொடர்பாக சர்வதேச நெருக்கடிகளிற்கு முகம் கொடுக்கவும், தன்னை ஜனநாயக விரும்பியாகக் காட்டிக் கொள்ளவுமே பாராளுமன்றத் தெரிவுக்குழு பிரேமதாசவுக்குப் பயன்பட்டது. இதில் மிக வேடிக்கையான விஷயம் என்னவென்றால் ஆளும் ஐ.தே.க.வோ, பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியோ இதுவரை எந்தத் தீர்வையும் முன்வைக்கவில்லை. இதைவிட அதிசயம், ஒரு சர்வாதிகாரிக்கு நிகரான அதிகாரங்களைக் கொண்டுள்ள (சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட) ஜனாதிபதியால் இனப்பிரச்சனைக்குச் சரியான தீர்வை முன்வைக்க முடியாமைதான்.

அண்மையில் நடைபெற்ற நவசமசமாஜக் கட்சியின் 15வது வருடாந்தக் கூட்டத்தில் பேசிய கட்சிக் பொதுச் செயலர் விக்கிரமபாகு கருணாரத்ன, "இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காணப்போவதாக ஜனாதிபதி கூறுவது ஒரு அரசியல் கேலிக்கூத்து. நடைபெறும் வடக்கு கிழக்கு யுத்தத்தில் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கிறது. தமிழ் மொழி பேசுவோரின் சுயநிர்ணயம், சமத்துவம், சுயாதிபத்தியம் என்பவற்றை அங்கீகரிப்பதன் மூலமே இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண முடிகிற அதேவேளை, புலிகளிடம் இருந்து சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களைக் காப்பாற்ற முடியும். இதற்குத் தற்போதைய அரசியலமைப்பு மாற்றி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியலமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். ஒரு வருடத்திற்கு மேலாகச் செயற்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு, இ.தொ.கா உட்பட ஏழு தமிழ்க் கட்சிகள் ஒன்றாகச் சமர்ப்பித்த குறைந்தபட்சக் கோரிக்கையான நாலு அம்சக் கோரிக்கையைக்கூட நிராகரித்துள்ளமை, பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் தெரிவுக் குழுவின் அக்கறையின்மையையே காட்டுகிறது" எனக் கூறியுள்ளார். இதே கருத்தை லிபரல் கட்சியும் வெளியிட்டுள்ளது. அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கலைக் கொண்ட சமஷ்டி ஆட்சிமுறையே இனப்பிரச்சனைக்குச் சரியான தீர்வு என, லிபரல் கட்சி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.

இதேவேளை பாராமன்றத் தெரிவுக்குழு தொடர்பாகத் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ள, பௌத்த சாசனம் - பௌத்த விவகாரங்களுக்கான சபை, ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள மகஜரில் இந்திய முறையிலான அதிகாரப் பரவலாக்கம் அயோத்தி நிலைமைக்கே வழிவகுக்கும் என்றும், காணிப்பகிர்வு பொலிஸ் அதிகாரம் ஆகியன மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டால் அது பௌத்த மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகமாகவே இருக்கும் எனக் கூறியுள்ளது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாக பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் இவ்வேளையில், தெரிவுக்குழுவில் இருந்து வெளியேறுவதாக இ.தொ.கா அறிவித்துள்ளது. பொருத்தமான தீர்வை முன்வைக்கத் தெரிவுக்குழு தவறிவிட்டதாக, குழுவின் தலைவர் மங்கள முனசிங்கவுக்கு தொண்டமான் எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார். இது பற்றிப் பத்திரிகையாளர்களிடம் பேசிய தொண்டமான், "இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாகப் புறக்கணிப்பது நல்லதல்ல. தீர்வுத் திட்டம் எதுவானாலும் புலிகள் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் பேசிப் பயனில்லை. பேச்சுவார்த்தையில் புலிகளும் பங்கேற்கும் சூழலை உருவாக்கவேண்டும்" எனக் கூறியுள்ளார்.

தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் பற்றிப் பத்திரிகைகளுக்கு அறிக்கை வெளியிட்டுள்ள தமிழ்க் குழுக்கள், 'நாம் நியாயமான தீர்வை எதிர்பார்த்திருந்தோம் ஆனால் நடந்திருப்பது வெறும் கண்துடைப்பு நாடகம்' எனக் கண்ணீர் வடித்துள்ளனர். தாம் விரக்தி, வேதனை அடைந்துள்ளதாகக் கூறியுள்ள இந்தக் குழுக்கள் தாம் தெரிவுக்குழுவில் இருந்து உடன் விலகுவது புத்திசாலித் தனமான காரியமல்ல என்றும், தொடர்ந்தும் சமாதானத் தீர்வுக்கு இறுதிவரை முயல்வதாகவும் கூறியுள்ளன. சுடுகண்டபின்னும் அடுப்படி நாடும் இவர்களது செயற்பாடுகளே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்பட்டு வருகிறது. தமிழ் மக்களட சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தையே நசுக்க முயன்று வரும் இலங்கையரசையும், பேரினவாதிகளையும் நம்பிச் செயலாற்றிவரும் இவர்கள் தமிழ் மக்களுக்கு அப்பட்டமான துரோகத்தை இழைத்து வருகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நத்தார் புதுவருடத்தையொட்டி ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க ஆலோசித்து வருவதாகக் கூறிய விடுதலைப் புலிகள் டிசம்பர் 24ஆம் திகதி கொக்குத் தொடுவாயில் நிகழ்த்திய தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 42 படையினர் கொல்லப் பட்டனர். புலிகளின் மேஜர் செங்கோலன் மற்றும் மேஜர் கிளி உட்பட 17பேர் இறந்துள்ளதாக அரசு கூறியுள்ளது.

யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அதேசமயம் புலிகள் அரசு இரகசியப் பேச்சு தொடங்கியுள்ளதாகக் கொழும்பு

www.tamilarangam.net

வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் சுயாதீன நிறுவனமான 'குவேக்கர்பீஸ்' இதில் முக்கிய பங்காற்றி வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. சமாதானப் பேச்சுகளில் தொடர்ச்சியாகப் பங்காற்றிய உயர்கல்வி அமைச்சர் ஹமீது தற்போது பாரிஸ் சென்றிருப்பதை இதற்கு ஆதாரமாக ராஜதந்திரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

சமாதானப் பேச்சு இரகசியமாக நிகழும் அதேவேளை, ராணுவத் தாக்குதல்களும் தொடர்கின்றன. மட்டக்களப்பு பகுதியில் தேடியழிக்கும் ராணுவ நடவடிக்கை மும்முரமாக முடுக்கிவிடப் பட்டுள்ளது. படுவான்கரையில் புதிதாக இரு ராணுவ முகாம்கள் திறக்கப் பட்டுள்ளன. முதலைக்கண்ணி மேட்டுக் கிராமத்தவர்களைப் பலவந்தமாக வெளியேற்றிய அதிரடிப் படையினர் தங்களது முகாம்களை விஸ்தரித்துள்ளனர். வெளியேற்றப்பட்ட மக்கள் மண்டூர் இராமகிருஷ்ண மண்டபத்தில் அகதிகளாக வசிக்கின்றனர். கிழக்கிலுள்ள பல்வேறு அகதி முகாம்களிலும் உணவுப் பற்றாக்குறை கடுமையாக நிலவுகிறது. அகதிகளுக்கு அனுப்பப்படும் உதவிப் பொருட்கள் பல இடைத் தரகர்களால் சூறையாடப் படுகிறது.

நாட்டின் நிலை இவ்வாறிருக்கையில் 1994இல் நிகழவேண்டிய ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே இவ்வருட நடுப்பகுதியில் நடத்தப் பிரேமதாசா உத்தேசித்திருப்பதாக நம்பப்படுகிறது. எதிர்க்கட்சினர் மத்தியில் நிலவும் இழுபறி நிலையும் உட்பூசல்களும் தேர்தலை நடத்த இதுவே சரியான தருணமென ஐதேக கருதுவதாகத் தெரியவருகிறது.

அண்மைக்காலமாகப் பிரேமதாசா விடுத்துவரும் அறிக்கைகளும் பரவலாக நடத்தப்படும் கூட்டங்களும் தேர்தற் பிரசாரத்தை அவர் ஆரம்பித்திருப்பதன் அறிகுறிகளாகவே தெரிகின்றன. வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு அரசியற் தீர்வை வலியுறுத்தும் பிரேமதாசா மறுபுறம் இதற்கு முரணாகத் தமிழ் மக்களை வேட்டையாடும் இராணுவ நடவடிக்கைகளையும் முடக்கி விட்டுள்ளார்.

*தமிழ் மக்களின் அபிப்பிராயக் குறியீடாக விடுதலைப் புலிகள் உள்ளனர் - தொண்டமான்*

*பாராளுமன்றத் தெரிவுக்குழு வெறும் கண்துடைப்பு நாடகம் - ஈபிஆர்எல்எ:ப், தவிகூ.*

*கிழக்கில் கைதாவோரில் பலர் அடையாளம் தெரியாதபடி குரூரமாக இராணுவத்தால் கொல்லப் பட்டனர். - செய்தி*

அண்மையில் நாடுதிரும்பியுள்ள முன்னாள் நிதியமைச்சர் றொணி டி மெல் கொழும்பில் கோலாகலமாக வரவேற்கப் பட்டுள்ளார். புளத்சிங்கள தொகுதியில் இவருக்கு நிகழ்ந்த பாராட்டு வைபவங்களில் மூண்ட கலவரங்களில் ஒருவர் இறந்தும், 10பேர் படுகாயமடைந்தும் உள்ளனர். இச்சம்பவத்தின் பின்னர் றொணி டி மெல்லுக்குப பலத்த பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. தற்போதைய புளத்சிங்கள எம்.பி. சரத் ரணவாக்கேயின் ஆதரவாளர்களே வன்முறையைத் தூண்டியதாகப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. மெல்லின் ஆதரவாளர்கள் பச்சைநிறக் கொடியையும், யானைச் சின்னத்தையும் பயன்படுத்தியமையே மோதலுக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. விரைவில் மேற்கொள்ளப்பட உள்ள அமைச்சரவை மாற்றத்தின் பின் றொணி மீண்டும் நிதியமைச்சர் ஆகலாம் என எதிர்பார்க்கப் படுகிறது.●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகிலேயே சனத்தொகை கூடிய நாடு சீனா என்பது எல்லோருக்கும் தெரியும். சனத்தொகையில் கூடிய நாடு என்ற பெருமை அதிககாலம் சீனாவிடம் நீடிக்காது என்று ஆய்வுகள் கூறுகின்றன. மற்ற விடயங்களில் எப்படியோ, சனத்தொகை விடயத்தில் சீனாவை முந்திவிட வேண்டும் என்று இந்தியா வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறது போலும். இன்னும் முப்பது வருடங்களில் உலகின் சனத்தொகை கூடிய நாடாக இந்தியாவே திகழலாம்.

இன்றைய கணக்குப்படி இந்தியாவின் சனத்தொகை 84.5கோடியாகும். இது கடந்த பத்து வருடங்களில் 23 வீதத்தால் கூடியுள்ளது. (1981ல் இந்திய சனத்தொகை 68.5 கோடி) ஆனால் பிரபல ஆய்வாளர் ஆசிஸ் போலேயின் கருத்துப்படி தற்போதைய தொகையில் 30லட்சம் விடுபட்டிருக்கலாம் ஆபிரிக்காவில் பிறப்பு வீதம் அதிகம்தான், ஆனால் முழு ஆபிரிக்காவிலும் பிறக்கும் குழந்தைகளின் தொகையைவிட இந்தியாவில் பிறக்கும் குழந்தைகளின் தொகை அதிகமாகும்.

அது மட்டுமல்ல ஸ்கன்டினேவிய நாடுகளின் சனத்தொகையைவிட இநிதயாவில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கைஅதிகம்.

2025ம் ஆண்டளவில் இந்தியாவின் சனத்தொகை 145கோடி ஆகிவிடும் எனக் கருதப்படுகிறது. இத்தகைய அதீத பெருக்கத்தால் இந்திய மக்கள் பாரிய உணவு சுகாதார வசிப்பிட பொருளாதாரப் பிரச்சனைகளை எதிர்நோக்குவர்.கல்வியறிவு உள்ளோரிடையே குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பிரக்ஞை உள்ளபோதும் முழுப் பெண்களில் 40வீதமனோர் மட்டுமே எழுத் வாசிக்க ஆற்றல் உடையவர்கள் என்பதால் தொடர்ந்தும் குடும்பக் கட்டுபபாட்டின் அவசியத்தை விளக்குவதிலும், செயல்படுத்துவதிலும் இந்தியா பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறது. (தென்னாசியாவில் இலங்கையிலேயே குடும்பக் கட்டுபபாடு கணிசமான அளவு வெற்றி தந்தது)

இந்தியாவில் கேரளாவில் மட்டுமே ஏறத்தாழ 90 வீதமானோர் எழுத வாசிக்க அறிவுடையவர்கள். (தமிழர்கள் பழைய பெருமையைப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள்) கேரளாவில்தான் பிறப்பு வீதம் மிக்க குறைவாக இருக்கிறது. (1.2%)

முழு இந்தியாவிலும் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் வீதமே உள்ளனர். இத்தொகை பத்து வருடங்கள் முன்னர் 934 ஆக இருந்தது. கேரளாவில் மட்டும் 1040 பெண்களுக்கு 1000 ஆண்கள் என்ற வீதத்தில் உள்ளனர்.

இந்தியாவில் சூழலியல் பாதுகாப்பு உட்பட பல சமூகப் பிரச்சனைகளை முன்னிறுத்திப் போராடும் பெண்கள் அமைப்புகள் சனத்தொகை அதிகரிப்பு பற்றி அபாயக் குரல் கொடுத்துள்ளனர். இந்தியாவில் பல பகுதிகளிலும் பெண் சிசுக்கள் கொலை செய்யப்படுவது தற்போதும் நிகழ்கிறது.


**சாதனைமிகு**

**இந்தியாவே!**



தேவகி

www.tamilarangam.net




# உலகைச் சுற்றிய கதைகள்

* சிலி நாட்டின் தென்பகுதியில் உள்ள புன்ரா அரினாஸ் என்ற இடத்தில் வசிக்கும் அனைவரும் - குழந்தை முதல் வயோதிபர் வரை - ஒவ்வொரு வருடத்தின் ஒக்டோபர் மாதத்திலும் கறுப்புக் கண்ணாடி அணியவேண்டும். காரணம், இந்த மாதத்தில் ஓசோன் படை மிக மெலிதாக ஆவதுதான்.

* சூரியனின் கதிர்கள் மனிதனுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவை என்பதைப் பல நாட்டு விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர். முக்கியமாக, சூரியனில் இருந்து வெளியாகும் புற ஊதாக் கதிர்களால் மனிதனுக்கும் பூமிக்கும் ஆபத்து காத்திருக்கிறது என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நச்சுக் கழிவுகளால், தென்துருவத்தில் உள்ள ஓசோன் படை பெரிதும் பாதிக்கப் படுவதாகவும், சில காலங்களில் வழமையான அளவைவிடப் பத்து மடங்கு பெரிதாக இந்தப் பாதிப்பு (அல்லது ஓட்டை) இருப்பதாக சிலி நாட்டு விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

* ஓசோன் ஓட்டையால் புற ஊதாக் கதிர்களின் தாக்கம் வெவ்வேறு துறைகளிலும் அவதானிக்கப் பட்டுள்ளது. தோலுக்காக வளரக்கப்படும் ஆடுகள், இறைச்சி ஆடுகளைவிட விரைவாகவும் அதிகமாகவும் குருடாகின (இறைச்சி ஆடுகளைவிடத் தோலுக்காக வளர்க்கப்படும் ஆடுகள் அதிகளவில் சூரியனுக்கு - புற ஊதாக் கதிர்களுக்குக் - காட்டப் படுவதால்). இவ்வாறே காட்டு முயல்களின் பார்வைக் குறைவு காரணமாக விரைவில் வேட்டையாடப் படுகின்றன. சூரியனின் தாக்கத்தைக் குறைக்கக் கறுப்புக் கண்ணாடி அணியாததால் ஒரு விவசாயி கண்பார்வை இழந்தார். இருமணி நேரம் வெளியில் விடப்பட்ட சிப்பாய் ஒருவர் சூரிய ஒளியின் எரிவுகளுக்கு உள்ளானார்.

* ஓசோன் படையில் ஏற்பட்டுள்ள துவாரங்களுக்குப் பொறுப்பான

www.tamilarangam.net

அபிவிருத்தியடைந்த நாடுகள், இந்த அழிவிற்கு 'நட்டஈடு' செலுத்த வேண்டும் என்று சிலியும், ஆர்ஜென்டீனாவும் றியோ டி ஜெனீராவில் நிகழ்ந்த 'பூமி மாநாட்'டில் கோரவிருந்தன. ஆனால் நடைமுறை, அரசியற் காரணங்களால் இந்த யோசனை கைவிடப் பட்டது.

* கடந்த 40 வருடங்களில் தைவான் மிக வேகமாக பொருளாதார வளர்ச்சி அடைந்தது. தைவானிடம் 8000கோடி டொலர் சேமிப்பிலுள்ளது. 1978இல் தைவானில் ஒருவரது சராசரி வருமானம் 1577 டொலராக இருந்தது. இத்தொகை 13 வருடங்களில் 9953 டொலராகியது.

இவ்வாறான விரைவான அபிவிருத்திக்காக தைவான் நாடு பெருமளவில் மாசுபடுத்தப் பட்டுள்ளது. நாட்டில் உள்ள எல்லா நதிகளும் அசுத்தமாகி விட்டன. வரவு செலவுத் திட்டத்தில் 3.5% மட்டுமே சூழல் பாதுகாப்பிற்குச் செலவிடப் படுகிறது.

– PS (Panascope) என்ற சஞ்சிகையில் வெளிவந்த சில தகவல்கள் –

**தொகுப்பு:**
**- தென்னவன் பிரமராயன்**




சிங்களம் மட்டுமல்ல ஏனைய மொழிகளிலும் கலை இலக்கியங்கள் வளரவேண்டும்
– பிரேமதாசா

www.tamilarangam.net

# கண்ணாடி வார்ப்புகள்



உருக்கி வார்க்கும் கண்ணாடி வேலைப்பாடு எமது நாட்டில் அவ்வளவாகக் கலை என்ற அங்கீகாரத்தைப் பெறவில்லை. ஆனால் பிற நாடுகள் பலவற்றில் உருக்கி வார்க்கும் கண்ணாடி வேலைப்பாடுகள் புகழ்பெற்றுள்ளதுடன் வடிவமைத்தல், நிறவேற்றுமை ஏற்படுத்தல் என்பன மக்களின் ஆர்வத்தைத் தூண்டும் கலைகளாக உள்ளன.



இந்த வகையில் கண்ணாடிகளை உருக்கி வேலைப்பாகள் செய்யும் சிறு தொழிற்சாலை ஒன்று 1742இல் தொடங்கப் பட்டது. இன்று அது தனது 250வருட நிறைவைப் பெரிதாகக் கொண்டாடுவதுடன் சிறப்பான கலையாகவும் கணிக்கப் படுகிறது.

பல நாடுகளில் இக்கலை அந்தந்த நாடுகளின் கலாசாரத்தை ஒட்டியே வளர்ந்துள்ளது. இவ்வாறான கண்ணாடி அலங்கரிப்புகள் அரண்மனை, மாளிகைகள், வீடுகள் மற்றும் கிறிஸ்தவத் தேவாலயங்களிலும் காணப்படுகின்றன.

கண்ணாடிகளால் அழகிய கைவினைப் பொருட்களை உருவாக்குவதும் இலகுவானதல்ல. இதற்கு நீண்டகால அனுபவம், பொறுமை, மிக நுட்பமான கையாளும் திறன் தேவை. அதிகளவு மூலப்பொருள் விரயமும் உண்டாகும்.

சுவீடனில் உள்ள இந்தத் தொழிலகத்தைப் பார்வையிட நோர்வே மற்றும் நாடுகளில் இருந்து ஏராளமானோர் வருகின்றனர். கடந்த வருடம் எட்டு லட்சம்பேர் இங்கு விஜயம் செய்தனர்.

– சித்திரகுப்தன் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வளர்ந்துவரும் பெட்டிசன் கலாசாரம்!

இதோ இந்தப் படம் பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் 'சிரித்திரன்' சஞ்சிகையில் வெளிவந்த ஒரு நகைச்சுவைத் துணுக்கு. இந்தத் துணுக்கு அந்தக் காலத்தில் பெரும் வரவேற்புப் பெற்றதுடன், பிரபலமானதும்கூட. காரணம், யாழ்ப்பாண சமூகத்தில் புரையோடிப்போன 'பெட்டிசன்' கலாசாரம் (அண்டிவைக்கும் கலாசாரம், காட்டிக் கொடுக்கும் கலாசாரம் எனலாமோ?) மிகவும் கவலைதரும் ஒரு அம்சமாக இருந்ததுதான். ஒருவரைப் பிடிக்காவிட்டால் அவர்பற்றி அவர் வேலை செய்யும் நிறுவனத்திற்கோ அல்லது அரச திணைக்களத்திற்கோ இல்லாத பொல்லாத புகார்களை எழுதி மொட்டைக் கடிதமாக அனுப்பி வைத்து விடுவார்கள். இதனால் பலர்மீது தவறுதலாக நடவடிக்கை எடுக்கப்பட்டுப் பலர் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

யாழ் குடாநாட்டில் மத்தியதர வர்க்கம் பெரும்பான்மையானதுடன் எமது சமூகத்தின் சிந்தனையும் மத்தியதர வர்க்கம் சார்ந்ததுதான். இந்த சமூகத்தின் ஒரு குணாம்சமாகத்தான் 'முன்னேறுதலும், மற்றவனைப் பின்னடித்தலும்' என்ற நோக்கோடு செய்யப் படுபவை. பொறாமை போட்டி போன்றவற்றால் இந்தப் 'பெட்டிசன்' கலாசாரம் பெரிய அளவில் எமது சமூகத்தை



பெட்டிசன் அடிப்பவருக்கு

யமலோகத் தண்டனை

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆட்டுவித்த பேயாக இருந்தது.

'அப்படியானால் இந்தப் பெட்டிசன் கலாசாரம் இப்போ இல்லைத்தானே?' என்று கேட்கிறீர்களா? பதிலோ இல்லை என்பதுதான். ஆனால் அதன் வடிவம்தான் வெவ்வேறு வகையானதாக இருக்கு என்பது கவலைதரும் உண்மை. முன்பு 'பெட்டிசன்' மூலம் ஒருவரது வேலைக்கோ, சொத்துப் பத்திற்கோ அல்லது அவர்களது முக்கியத் தேவைகளுக்கோ மாத்திரம் உலை வைக்கும் என்ற நிலையில் இருந்த கலாசாரம், படிமுறை வளர்ச்சி அடைந்து, உயிர்பறிக்கும் அளவில் இன்று வந்து நிற்கிறது.

தனிநபர் பொறாமைகளை, இயக்கப் பிரச்சனையைத் தீர்த்துக்கொண்ட சம்பவங்கள் ஏராளம். இலங்கை - இந்திய அரசுகளுக்குத் தமது தனிப்பட்ட போட்டி பொறாமைகளைத் தீர்க்க, மற்றவர்களைப் பற்றிப் பல தனிநபர்கள் பொய்த் தகவல்களைக் கொடுத்து மற்றவர் மீதான பொறாமையைத் தீர்த்துக் கொண்டனர். அல்லது வெவ்வேறு இயக்கங்களில் தமக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இந்தப் பழிதீர்த்தல் நிகழ்ந்தது. கடந்த பத்துவருட காலத் தமிழர் வரலாற்றில் இவ்வாறான பல சம்பவங்களை உதாரணம் காட்ட முடியும்.

இது மட்டுமன்றி இன்று அகதிகளாகப் பல்வேறு நாடுகளுக்குக் குடிபெயர்ந்துள்ள தமிழர் மத்தியிலும் இந்தப் பெட்டிசன் கலாசாரத்தின் எச்ச சொச்சங்களைக் காணலாம். வேலைத்தலங்களில் தமக்குப் பிடிக்காத சக வேலையாளர்கள் பற்றி இல்லாதது பொல்லாததுகளை அண்டி வைத்தல், அகதி அந்தஸ்துக் கோரியவர் உண்மையான தகவல் தரவில் லை என்று பெட்டிசன் போடல், வெவ்வேறு நாடுகளின் அதிகாரிகளுக்கும், வெவ்வேறு நாடுகளின் தூதராலயங்களுக்கும் தமது நலனுக்காக வெவ்வேறு நபர்கள் பற்றியும் அவர்களது நடவடிக்கைகள் பற்றியும் இல்லாதது பொல்லாததுகளை அண்டி வைத்தல் என எமது பெட்டிசன் கலாசாரம் பெரிய அளவில் வளர்ந்து செல்வதைக் காணலாம்.

தனக்குத் தலைபோனாலும் எதிரிக்குச் சகுனம் பிழைக்க வேண்டும் என நினைக்கும் நிலையில் சமூகமோ சிந்தனையோ இருப்பின் நாம் ஓர் அழிவுறும் சமூகமாகவே இருப்போம்.

சில படைப்புகள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக் கூடியனவாக இருக்கும். பல ஆண்டுகள் முன்பு வெளிவந்த இந்த சிரித்திரன் சுந்தரின் இந்தப் படைப்பு இன்றும் மக்களின் சிந்தனையைத் தூண்டும் ஒரு வெற்றிப் படைப்பாகவே இருக்கிறது!

## ● ஜோக்கிளார் ●

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேகே பத்திரிகை பற்றிய விளக்கத்தில் கட்டுரையாசிரியர், அதிகம் பாதிப்புக்கு உள்ளான விடுதலைப் புலிகளது நிலைப்பாடுகள் பற்றியும் தெரிந்தளவிலாவது விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். இதனால் புலிகளின் இது தொடர்பான நிலை பற்றியும் வாசகர்கள் அறிய வாய்ப்பு உண்டாகியிருக்கும். புலிகள் (பலர் குற்றம் சாட்டுவதுபோல வன்முறைகள் இல்லாமல்) இங்கு ஜனநாயக ரீதியாக இயங்கலாம் என்பதைக் கட்டுரை ஆசிரியர் வலியுறுத்தியிருக்கலாம்.

இரா.முத்து



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நாற்சந்தி

இமயவரம்பு கடந்த கங்கைகொண்டார் செயல்களை நிகர்த்தது உங்களது நான்காண்டுகள் கடந்த சேவை. ஒருவகையில் வரம்புகடந்த பரப்புமிக்க ஆக்கப் பணியெனக் கூறலாம்.

## சயனைட் அருந்தும் தற்கொலை சரித்திர சாதனையா?

சிவரமணியின் தற்கொலை பற்றி எழுதிய திருவாளர் சிவசேகரம் அவர்கள் சயனைட் குடித்து மரணிப்பதும் கோழைத்தனமா என வினா ஒன்றை எழுப்பியுள்ளார். மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்கள் சயனைட் குடித்து மரணிப்பதை வரவேற்கிறாரா? மாபெரிய தியாகம் எனச் சொல்கிறாரா? அப்படியாயின் என் மனதில் எழுகிற சில கருத்துகளை உங்களுடனும் சுவடுகள் வாசகர்களுடனும் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

வீரம் என்பதன் உண்மையான பொருள் என்ன? எதிரி ராணுவத்திடம் சிக்கிச் சித்திரவதைப் படாமல், சிறைவாசம் அனுபவிக்காமல், இயக்க இரகசியங்களை வெளியிடாமல் பாதுகாப்பதற்கு, தற்கொலைதான் புரட்சிகர இயக்கத்தின் வீர வழிமுறை என்று கருதுகின்றோமா?

எமது கண்கண்ட அனுபவத்தில் சந்தேகமில்லை. அவனது தற்கொலை வீரத்தின் அறிகுறியல்ல; அவனது இயலாமையின் வெளிப்பாடே.

ஓர் விடுதலைப் போராளி மிகுந்த நம்பிக்கையோடு போராட வேண்டியவன். எத்தனை இழப்புகள் வந்தாலும், சித்திரவதைப் பட்டாலும், தனது கொள்கையில் உறுதியாகவும், தனது இரகசியங்களைப் பாதுகாப்பவனாகவும் இருக்க வேண்டும். இதைவிடுத்து விடுதலைப் போராளிகள் எல்லாம் சயனைட் குப்பியை ஏந்தியிருந்தால் இன்று நாம் பல தலைவர்களை, பல விடுதலைச் சரித்திரங்களை அறிந்திருக்க மாட்டோம்.

ஒரு சிறு உதாரணம்: இந்திய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நுகர்பொருட்களின் மாயையில் மூழ்கிச் சொந்த மொழி, பண்புகளைக் கோட்டைவிடும் புலம்பெயர்ந்தவர்களின் இடையே தமிழ்ச்சுரணை தோன்ற புரியும் உங்கள் பணி வாழ்க.

'செந்தில்' கட்டுரை தடம்புரளும் தமிழர்களது போக்கை எடுத்துக் காட்டுகிறது. அறிய வேதனைதான் தோன்றுகிறது. 'ஜெயம்' சிறுகதையும் மற்றொரு பகுதியினர் 'பண்பாடு' என்ற போலிச் சாட்டில் தன்பாடு காணும் தறுதலைகள் கடல்கடந்தும் படித்த பாடத்தை உணராதிருப்பதும் இத்தகையதே. இத்தகைய சூழ்நிலையில் உங்கள் பணி உயர்வானதே.

ஸ்கன்டினேவிய நாடுகளின் தனித்தன்மையின் சீர்மையையும், இன்றைய சூழ்நிலையில் தோன்றியுள்ள தாக்கத்தையும், சமுத்திரன் பேராசிரியர் நாக்கமுறா பார்வையில் விளக்கியுள்ளது சிந்தனைக்குரியது.

கே.கணேஷ்
இலங்கை.

எத்தனை இளைஞர்கள் வீணாக இதனால் அழிந்தார்கள்! மட்டக்களப்புச் சிறை உடைத்து இளைஞர்கள் வெளிவந்த பின்னும், அவர்கள் பிடிபட முன்னர் சயனைட் குடித்து மரணித்திருக்க வேண்டும் என்று ஆசிரியரும் கருதுகிறாரா?

சயனைட் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் இராணுவத்திடம் பிடிபட்டால் சயனைட் அடிப்பாரா அல்லது.....? இவ்வாறான வினாக்கள் சாதாரணமாக விவாதிக்கப்படும் ஒரு விடயமா? இவ்வாறு விவாதம் செய்வதே ஆரோக்கியமானதா? பிரபாகரன் சயனைட் அருந்தாமல் பிடிபட்டால் அவர் வீரமிகு போராளி இல்லையா?

சயனைட் மருந்தின் முன்னோடியான சிவகுமாரன் சயனைட் குடித்ததை எந்தவித விமர்சனமும் இல்லாது வீரத் தியாகியாக்கியது கூட்டணி. தேர்தல் வெற்றிக்கு அதனைப் பயன்படுத்தியது. சிவகுமாரன் சரியான அரசியல் கொள்கையைக் கடைப்பிடியாததும், புரட்சிகரமான ஓர் இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதையும் - தனது உண்மையான நண்பர் யார் எதிரி யார் என்பதையும் புரிந்து கொள்ளாமல் இருந்ததும்தான் அவனது தற்கொலைக்குக் காரணமாகும். அவன் வீரத்தில் எவருக்கும்

இராணுவம் வந்த வேளை அவர்களுக்கும் புலிகளுக்கும் பெரும் சண்டை மூண்டதற்கு முக்கிய காரணமாக இறந்த பத்துக்கு மேற்பட்ட போராளிகளைச் சொல்வார்கள். இந்த சயனைட் வழிமுறை இல்லையென்றால் அவர்களது மரணம் தவிர்க்கப் பட்டிராதா?

ஓர் இயக்கத்தில் தற்கொலைப் படை இருப்பது வேறு. இயக்கமே தற்கொலைப் படையாக இருப்பது வேறு.

ஆசிரியர் அவர்களே! இன்று மூன்றாவது சக்தியொன்றை உருவாக்க வேண்டும், புதிய ஜனநாயகத்தை வென்றெடுக்க வேண்டும் என விரும்புகிற அனைவரும் உங்கள் கட்டுரைகளை விரும்பிப் படிக்கிறார்கள்; விவாதிக்கின்றார்கள். அவர்கள் நாட்டில் கால் பதிக்கும்போது தமது வீரத்தை வெளிப்படுத்த கழுத்தில் சயனைட் குப்பியை அணிந்தா செல்ல வேண்டும்? புலித் துப்பாக்கிகள் சுற்றி வளைக்கும்போது சயனைட் அணிந்து மரணிக்க வேண்டுமா? ஆசிரியர் அவர்கள்தான் சயனைட் பற்றிய விளக்கம் அளிக்க வேண்டும்.

சிவா.கணேசமூர்த்தி
ரொறன்ரோ, கனடா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உ_யனை


# பி

**21**.08.92 அன்று 'சூரிய திரிச்சி' எனும் இராணுவ நடவடிக்கை அளவெட்டிப் பகுதியை இராணுவ மயப்படுத்தியது. தற்போது யாழ்ப்பாணத்தின் பெரும் பகுதியான கரையோரம் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வந்து விட்டது. அதாவது அகதிகளின் தொகை அதிகரித்து விட்டது.

அன்று அதிகாலையில் அளவெட்டியின் வயல்களுக்குள் இராணுவம் புகுந்தது. இதனைப் புலிகள் அறிந்திருக்கவில்லை எனச் சொல்லப்படுகிறது. காலை ஆறு மணியளவில் பொம்மர்கள் வந்தன. பொம்மர்கள் குண்டுகளை ஏவிய பின்னர் சரமாரியான துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களுடன் அளவெட்டி இராணுவ ஆக்கிரமிப்பிற்குட்பட்டது. மக்கள் சிதறி ஓடத் தொடங்கினர். சிலர் நித்திரைப் பாயிலிருந்து இராணுவத்தால் வெளியேற்றப்பட்டனர். எப்பொருளும் எடுப்பதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. இலக்கற்ற துப்பாக்கி சூட்டினால் பலர் கொல்லப்பட்டும், படுகாயத்திற்கும் உட்பட்டனர். ஓடியவர்கள் போக எஞ்சியவர்கள் இளவாலை கன்னியர் மடத்துக்கு வலிந்து அனுப்பப்பட்டனர். பின்னர் கொள்ளையடித்தல் கலாமானது.

சிதறி ஓடிய குடும்பங்களின் அங்கத்தினர் யார், யார் இறந்தனர், யார் அகதி முகாமில் இருக்கின்றனர், யார் தப்பிப்பிழைத்தனர் என்பது பற்றி ஒன்றும் தெரியாத நிலை. இன்னமும் கூட இறந்தவர்களின் முழு விபரமும் அறிய முடியவில்லை.

ஆக்கிரமிக்கப்பட்ட பின்னர் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டன. முகாம் அமைப்பதற்கும், அதனைச் சுற்றிப் பாதுகாப்பு அரண் அமைப்பதற்கும், பாதைகள் அமைப்பதற்கும் கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும் யாவும் தெளிவாகத் தெரிவதற்குமாக பல வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.



வலிமை வாய்ந்த பனை மரங்கள் வேரொடு சாய்க்கப்பட்டன. இதன் போது அளவெட்டியும், அதனைச் சுற்றியுள்ள அம்பனை வயல் வெளியும், உயனைப் பனங்கூடலும், பினாக்கை குளமும் சமவெளியாகக் காட்சி தருகிறது.

இங்கு மிகப் ... னவெளியில், ... இராணுவம் ... ரும் கொஞ் ... வில்லை. இர ... குரியதோ கே ... வாய்ந்த இ ...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ாப் பனங்கூடலும்

# ாக்கைக் குளமும்



மாதவன்

ியாரிய துயரம் என்
ாவெட்டிப் பக்கம்
மென்பதை ஒருவ
ும் எதிர்பார்க்க
ுவ விஸ்தரிப்பிற்
ிர முக்கியத்துவம்
ா அல்ல ஏற்கெ

னவே இராணுவ எல்லை பெருக்கப்பட்ட இடங்களான பலாலி, கட்டுவன், குரும்பசிட்டி, காங்கேசன் துறை, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை போன்ற இடங்களிலிருந்து அகதிகளானோர் அளவெட்டிக்குதான் இடம் பெயர்ந்தனர். அளவெட்டி, தான் தாங்கும் சக்திக்கும் மேலாக ஏனைய கிராம மக்களைத் தாங்கி வைத்திருந்தது. இருந்தோரும், வந்தோரும் இராணுவ வரவு பற்றி எதிர்பார்த்திருக்கவில்லை. இராணுவ முகாமின் அயல் கிராமங்களை சேர்ந்தவர்கள் சின்னப் பார்சல்கள் வைத்திருப்பதுண்டு. நகைகள், முக்கியமான ஆவணங்கள், மாற்றுடுப்புகள், மிகப் பெறுமதியான சிறு பொருட்கள், பணம் ஆகியன இப்பார்சலில் உள்ளன. இத்தகைய பார்சலை இக் கிராம மக்கள் ஆயத்தப்படுத்தி வைத்திருக்கவில்லை. யாவற்றையும் துறந்து விட்டு ஓடினார்கள். மீண்டும் உள்ளே செல்வதற்கு இராணுவம் அனுமதிக்கவில்லை. முக்கியமாக புலிகளுக்குப் பவுண் கட்டின நிசீற்றும் எடுக்க முடியாததனால், அவசர தேவைக்கு மீண்டும் இரண்டு பவுண் கட்ட வேண்டிய தேவை உண்டு.

புலிகளுடனான யுத்தம், அழிக்கப்படுவது புலிகள் மாத்திரமே என்பது அரசாங்கத்தின் அறிக்கை. இங்கு புலிகள் எதிர்த்து தாக்குதல் மேற்கொள்ளவில்லை. ஆயினும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, அளவெட்டி சீனன் கலட்டிப் பாடசாலைகள் சேதமாக்கப்பட்டன. அம்மன் கோயில், பிள்ளையார் கோயில் சேதமடைந்தன. மக்கள் இறந்தனர். வீடுகள் அழிந்தன. அகதிகளாக மல்லாகத்திலும், மாகியப்பிட்டியிலும், சுன்னாகத்திலும் வசிக்கிற அவவொ டி மக்களுக்கு தங்கள் வீடுகள் தகர்ந்து நொருங்கும் சத்தம் அடிக்கடி கே கின்றது.

இது நடந்து ஒரு வாரத்தின் பின்னர் கொக்குவிலில் நடைபெற்ற புலிகளின் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பழம் பெரும் உறுப்பினரான தேவர் கூறினார்; அளவெட்டியில் எங்களுக்கு ஆதரவு இல்லை. ஒருவரும் இயக்கத்தில் சேர்வது மில்லை. இவ்வாறான ஊர்களை நாங்கள் இப்படித்தான் அனாதரவாகக் கை விடுவோம் என்றார்.

நன்றி: சரிநிகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவலங்கள்
## குறுநாடகம்

**நாடோடி**

திரைவிலக, மேடையின்முன் வலது ஓரத்தில் கைவிளக்கு ஒளியில் சாரமும், பெனியனும் அணிந்த ஒருவர் 'அ' எழுதுவதுபோல் பாவனையில் இருப்பார். மேடையின்முன் இடது ஓரத்தில் மேசை மின்சார விளக்கொளியில் ஒருவர் 'ஆ' கடிதம் வாசித்துக் கொண்டிருப்பதாய்ப் பாவனை செய்வார். கடித வாசகத்திற்குரிய குரலை விளக்கொளியில், வலதுபுறத்தில் இருப்பவர் கொடுப்பார்.

<u>கடிதம் – அகவல் தென்மோடி</u>

அ:
நேசமண் மீதோர் நிலக்குழி தன்னில்
முகமது மறைத்து வாழுமென் மடல்காண்.....

சென்றதோர்கால வசந்தத்தில் உந்தன்
நண்பனின் மரணம் அறிவித்தேன் அறிவாய்.....,

அறிக நீ இப்போ தலைமுறை ஒன்றின்
நம்பிக்கை தன்னின் மரணத்தை நண்பா........

அக்கிர மங்கள் நாடெலாம் பரவி
வெறுப்பான இருள்தான் பூமியை விழுங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதைக்கப்படாத விளைநிலம் எல்லாம்
வானத்தைப் பார்த்து வரண்டன ஐயோ.......

(மேடை விளக்குகள் எரிகின்றன. இரு கூலி விவசாயிகள் 'அ'இன் பக்கம் இருந்து சோகமாய் வருகின்றனர். பின்னணியில் பாடல் ஒலிக்கின்றது)

பாடல்:

மண்ணிலெங்கள் வியர்வை கொண்டு எழுதிய வரலாறு -
ஓடுமெங்கள் குருதியிலே குளமாய் ஆனதுவோ

உடல்களை வருத்தி வியர்வைகள் உதிர்த்து
நிலங்களை விளைவித்தோம்
விளைநிலக் குழியில் உரங்களைப் போலெம் -
உடல்களை நாம் தொலைத்தோம்.
(மண்ணிலெங்கள்..)

மணிக்கதிர் விளையும் பசிகளும் தீரும்
உயிர்களும் வாழுமென்று
கூரையின் நிழலில் துமிமழை ஏந்தி -
விழிகளும் பனித்திருந்தோம்......
(மண்ணிலெங்கள்)

இ: இந்தத் தோட்ட வரம்பில குந்தியிருந்து வானத்த அண்ணாந்து பாக்கிறதுதான் எங்கட வேலயாப் போச்சு.

ஈ: கறண்டில்ல. கொள்ளயில போவார் மண்ணெண்ணயயும் நிப்பாட்டிப் போட்டாங்கள். மழதண்ணி இல்லாமல், உள்ள பயிர் பச்சையெல்லாம் வாடிப்போச்சு.

இ: நாங்க நம்பியிருந்தவங்கள்தான் எங்களக் கைவிட்டிட்டாங்களெண்டால் இயற்கயுமெல்லோ எங்களத் தண்டிக்குது.

ஈ: வானம்பாத்த பூமியோட சேந்து நாங்கள் எத்தின நாளக்குத்தான் அண்ணாந்து பாக்கிறது.......? மழ இரையுதெண்டு வானத்தப் பாத்தால் குண்டுபோடுற கப்பல்களெல்லோ வரிசையா வருகுது.

இ: காஞ்சு வெடிச்ச நிலத்தப்போல எங்கட பிள்ளகுட்டியளின்ர வயிறுகளும் முகங்களும் காஞ்சுபோச்சு.

ஈ: பிரச்சனையள் தீருமெண்டா அதுக்குமொரு வழியையும் காணேல்ல. எங்கட பிரச்சனையள் தீரவேணுமெண்டு ஆரும் விரும்பிறதாயும் தெரியேல்ல.

இ: இதுகளயெல்லாம் இனிநாங்கள் ஆரிட்டப் போய் முறையிடுறது? ஆரிட்டப் போய்ச் சொல்லி அழுகிறது?

ஈ: ஆராரோ எல்லாம் எங்களக் காப்பாத்த வருவினமெண்டு நாங்களும் நல்லா நம்பித்தான் ஏமாந்துபோனம். இனியும் ஆராவது வருவினமெண்டு நம்பினால் ஒரு பிரயோசனமும் இல்லப்போல கிடக்கு.

<u>பாடல்</u>: (மண்ணிலெங்கள்.... பாடலின் மீதி)

கீழ்த்திசை கீறி விடியுமென் றெண்ணி விழிகளைத் திறந்து வைத்தோம்
புழுதிகள் விழுந்தெம் விழிகளும் நோக
விழிகளை நாம் தொலைத்தோம்....
(மண்ணிலெங்கள்.....)

(மேடை விளக்குகள் அணைய, முன்னாலுள்ள கைவிளக்கும்,

மேசை விளக்கும் மாத்திரம் எரிகின்றன. விவசாயிகள் தமது நிலைகளில் அப்படியே நின்று பாவனைகளால் தமது துயரங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்)

– மேடையின் இடதுஓரத்தில் மேசை விளக்கொளியில் உள்ளவர் (ஆ), எழுதுவது போன்ற பாவனையிலும், வலது ஓரத்தில் கைவிளக்கொளியில் உள்ளவர் (அ) கடிதம் வாசிப்பது போன்ற பாவனையிலும் இருப்பார். கடித வாசகத்திற்குரிய குரலை இடது ஓரத்தில் உள்ளவர் (ஆ), கொடுப்பார்.

கடித வாசகம் (அகவல் – தென்மோடி)


ஆ:
*உயிரோடு உணர்வும் சுமந் திருள் மண்ணில்*
*தனியாக வாழும் உன்மடல் கண்டேன்*

*புரியாத காற்றும் அறியாத மொழியும்*
*பனிபடர் தெருவில் நானுமோர் தனியன்.*

*அந்நியம் தன்னின் கொடுமையோ கொடிது*
*சூழவும் எல்லாம் சூன்யமே நண்பா*

*நிலங்களுக் கேற்ப நிறங்களை மாற்றும்*
*மனிதர்கள் இங்கே காண்கிறேன் நண்ப......*

மேடை விளக்குகள் எரிகின்றன. ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கும் இருவர் (உ,ஊ), – முதுகில் புத்தக மூட்டையுடன் ஒருவரும், வேலை முடிந்து வருபவர் போல் மற்றவரும் – 'ஆ'வின் பக்கமிருந்து மேடைக்கு வருகின்றனர். மேலைத்தேய இசையொன்றிற்கேற்ப தாளலயத்துடன் –



இருப்பவர் (ஆ) கடிதம் வாசிப்பது போன்ற பாவனையிலும், கடிதத்திற்குரிய அகவலை வலதிலுள்ளவர் (அ) கூறுவார்.

<u>அகவல் – தென்மோடி</u>

அ:
*பீரங்கி சகிதம் கரை கரை யாக*
*கடற்பேய்கள் திரியும் காலமே கேளாய்*

*கடலண்டி வாழும் மனிதர்கள் சாகும்*
*நிலையது கொடுமை தினம் தினம் நண்பா*

*வலைதனை வீசும் மனிதர்கள் இப்போ*
*மரணத்தின் வலையில் வீழ்ந்தனர் கொடுமை*


www.tamilarangam.net

www.tamilarangam.net

இருவரும் மேடையின் மத்தியில் வந்ததும் உரையாடல் தொடங்குகிறது.

*உ: உம்மட கொமியுன் எப்பிடி? வசதியே?*

*ஊ: பரவாயில்ல...... ஸ்கூல் எடுக்கலாம். வேல எடுக்கிறதுதான் கொஞ்சம் கஸ்ரம். தேடினால் எடுக்கலாம்.*

*உ: உம்மட கொமியுனில வந்து கையுசத்தலாமெண்டு யோசிக்கிறன். என்ன நினைக்கிறீர் ஐசே?*

*ஊ: என்ன அஸிலோ......?*

*உ: ஓம் வேலை செய்யிறனெண்டு ஸ்கூல் லோனை நிப்பாட்டிப் போட்டாங்கள்......*

*ஊ: அப்பிடியெண்டால் அஸில் அடிக்கிறது நல்லம். உடன தருவாங்கள். நீர் ஸ்ருடண்ரா இருக்கேக்க நாட்டுக்கு ஒரு தடவையும் போகேல்லத்தானே....? அப்பிடிப் போய்ற்று வந்தாத்தான் கொஞ்சம் கஸ்ரம். கிட்டடியிலயும் கொஞ்சப் பேரப் பிடிச்சு அனுப்பிப் போட்டாங்கள். ஆனால் உமக்குக் கட்டாயம் தருவாங்கள். இண்டைக்கு ரீவி ரெக்ஸ்ற் பாத்தனீரே.....? உம்மட ஊர்ப்பக்கந்தான் பிரச்சனையாம். பதினேழு பேர் சரியாம்.*

*உ: அப்ப இன்னும் ரெண்டு மூணு வருசம் பிரச்சனையில்ல.*

*ஊ: ஓமோம் பிரச்சனை முடியிறவரை அனுப்ப மாட்டாங்கள், இப்ப கொஞ்சநாளா நியுநாஸியளின்ர மூச்சயும் காணேல்ல, நாங்க பயப்பிடத் தேவயில்ல.*

*உ, ஊ: நாங்க விசாவுக்குப் பயப்பிடத் தேவயில்ல. ஊரில பிரச்சன, கனபேர் சாகினம். எங்களுக்கு விசா கிடைக்கும்.*

மேடை விளக்குகள் அணைகின்றன. கைவிளக்கும் மேசைவிளக்கும் மாத்திரம் எரிகின்றன. இடதுபக்கம்

*உவர்க்கரை வாழ்ந்த மனிதர்கள் இன்று*
*எக்கரை வாழும் நிலைதனை இழந்தார்.*

(மேடை விளக்குகள் எரிகின்றன. மீனவர் - எ,ஏ - மேடைக்கு நகர்ந்து வருகின்றனர், 'அ'வின் பக்கம் இருந்து. பின்னணியில் பாடல் ஒலிக்க அதற்கேற்றாற் போல் பாவனைகளுடன் மேடை மத்திக்கு வருகின்றனர்)

*எ,ஏ:*

*தன்னானே னானனனே தானனன்னே னானனன்னே*
*தன்னானே னானனனே தானனன்னே னானனன்னே*

*அலைமேலே வலைவீசும்*
*வாழ்வு எங்கோ போனதடா*
*கரைமேலே உயிர் வாடும்*
*காலமென்று ஆனதடா.*
*- தன்னானே...*

*ஏறினமே தோணியில*
*வீசினமே அலையில் வலை*
*நனையலையே ஒருபறியும்*
*நிறையலையே ஒருவயிறும்*
*- தன்னனானே.....*

*கரையிலெங்கள் குடிசைகளும்*
*புழுதியிலே தினம் நனையும்*
*கரை அலையும் குழந்தைகளோ*
*கந்தலுடன் கரை அளையும்*
*- தன்னானே.....*

www.tamilarangam.net



எ: எத்தின நாளைக்குத்தான் இப்பிடிப் பட்டினியோட சாகிறது?

ஏ: பட்டினியில பாதி, பாழ்பட்டுப் போவாரால பாதியெண்டு ஒரு குஞ்சு குருமானுமில்லாமல் ஊரெல்லாம் சுடுகாடாப் போற நிலமயாப் போச்சு.

எ: கரைவழிய வலயப்படுத்து காரல் கீளியாவது கொண்டுவந்து அவிச்சு, பசியில சாகிற குழந்தயளுக்குக் குடுக்கலாமெண்டால் கரைவழியவும் அடையாளக் காட்டுக் கேட்டு அடிக்கிறாங்கள் அறுந்துபோவார்.

ஏ: கொள்ளயில போன விதானப்பயல் பாரை, சிறையா எண்டு வாங்கித் திண்டுபோட்டு அடையாளக் காட்டும் தாறானில்ல.

எ: அடையாளக்காட் காட்டினாப்போல மீன்பிடிக்க விடவா போறான்? அடையாளக்காட்டப் பிச்சுத் தின்னடா எண்டெல்லோ அடிக்கிறான்.

ஏ: இப்பிடியே நாறிப்போன மீனுகளப்போல கரைகரையா எங்கட சந்ததியே அழியிற கொடுமையாப் போச்சு.

எ: கடல் வளயமோ கண்டறியாத வளயமெண்டு பாதிச் சனத்தத் திண்டாங்கள். இப்ப பம்பராலயும், கெலியாலயும் சுட்டுத் தின்னுறாங்கள்.

ஏ: கூழோ கஞ்சியோ குடிச்சுக்கொண்டு இந்த ஒதுக்குவழிய கிடந்தம். இப்ப கூழுக்கும் வழியில்ல, கஞ்சிக்கும் வழியில்ல.

எ: மழை வெயிலுக்கு ஒதுங்கிறதுக்கு ஓலக்கொட்டிலாவது இருந்துது. இப்ப......

ஏ: அகதியளா கிராமம் கிராமமா ஓடவேண்டியிருக்கு.

எ: சாகக் கிடக்கிற கிழடு கட்டயளையும் குழந்தை குட்டியளயும் தூக்கிக் கொண்டு எத்தின

யாரிடம் சென்று முறையிடுவோம் - எந்தக்
காற்றினிற் துயரைக் கரைத்திடுவோம்
எவரிடம் சென்று முறையிடுவோம் - எந்த
முகில்களால் விழிகளைத் துடைத்திடுவோம்.

(மீனவர்)

எ,ஏ:
தீயிலும் வேகாத துயரங்கள் - இங்கு
தீயவர் செய்யும் பயங்கரங்கள்

(விவசாயிகள்)

இ,ஈ:
தீருமெம் வேதனை இனியென்று - தினம்
தீயினில் வேகுதல் முறையன்றோ......

(மேடை விளக்குகள் அணைய, கைவிளக்கு ஒளியும், மேசை விளக்கொளியும் மட்டும் எரிகின்றன. கைவிளக்கொளியில் உள்ளவர் 'அ' பேசுகிறார். கடிதத்தை வாசிப்பதுபோல் பாவனையில் 'ஆ' இருக்கிறார்)

நண்ப!

பசியாலும், மரணபயத்தாலும் வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் எமது தேசத்தின் துயரங்களில் ஒரு சிறங்கை அளவுதான் இவை. இலங்கைத்தீவைச் சூழவுள்ள இந்துசமுத்திரத்தின் அலைகளின் எண்ணிக்கைகளைவிட அதிகம்தான் எமது மக்களின் அன்றாடத் துயர்களின் எண்ணிக்கை.

நாளைக்கெண்டுதான் ஊரூரா ஓடித்திரியிறதோ தெரியயில்ல.

ஏ: எங்கட துன்பங்கள நாங்கள் ஆரட்டப் போய்ச் சொல்லி அழுகிறது? எந்தக் கடல்ல கொண்டுபோய்க் கொட்டிறது?

பாடல் (மீனவர்)

எ,ஏ:
தீயிலும் வேகாத துயரங்கள்
தீயவர் செய்த பயங்கரங்கள்
தீருமெம் வேதனை இனியென்று - தினம்
தீயினில் வேகுதல் முறையன்றோ

அலையினில்த் தவழும் குழந்தைகள் நாம் - நிதம்
நிலைகுலைந் தழியும் நிலையாமோ
அலைகள்வந் தேறும் கரைகளிலே - நாம்
அணகிய பிணமாய் அழிவோமோ

- தீயிலும்.....-
(பாடலின் அடுத்த அடி - விவசாயிகள்)

இ,ஈ:
வயல்வரப் பெல்லாம் அழிந்தனவே - எங்கள்
எலும்புகளாலே நிறைந்தனவே
குடிசைக ளெல்லாம் எரிந்தனவே - எங்கள்
குருதியில் அவையெல்லாம் நனைந்தனவே

அப்பாவிகளின் கண்ணீர் நித்தியமானது. கூரிய வாளைவிட வலிமையானது. சனங்கள் யோசிக்கத் தொடங்கிவிட்டார்கள். வாழப் போராடும் சனங்களின் சிந்தனையும் செயலும் இரும்பைவிட உறுதியானது. ஒன்றாய், இரண்டாய்........ ஓராயிரமாய் ஓரணியாய் மக்கள் தெருவில் இறங்குவர். இது தீர்க்கதரிசனமல்ல. வரலாற்று நியதி.

- திரை -

## பொற்காலம்

"அலுவலரே, இவனைக் கொண்டுபோம்....."
"ஐயா, எனக்காகத் தூக்குமேடை
காத்திருப்பது தெரியும்.
ஆயினும் நான் என் அக்னியை வழிபடுங் கவிஞன் மட்டுமே.
அதைவிட நான் ஜொல்ஜொதாவை நேசிக்கிறேன்"

"அலுவலரே, இவனைக் கொண்டுபோம்!
இவனிடஞ் சொல்லும்: 'அதிகாரியின் பாதணி
உன் முகத்தைவிட அழகானது'."

பொன்னாலான பாதணியின் யுகமே
நீயே அழகிலும் விலையிலும் அதியுயர்ந்தனை.

**பலஸ்தீனக் கவிஞர் அடோனிஸ்**
**தமிழில்: மணி**



www.tamilarangam.net

ஒக்டோபர் 1

* மன்னார், வெலிஓயா, செட்டிகுளத்தில் புதிய தாக்குதல்கள் நிகழ்ந்துள்ளன.

* மட்டக்களப்பு வயல்களில் உத்தரவின்றி வெளியார் வேளாண்மை செய்யத் தடை விதிக்கப் பட்டுள்ளது.

ஒக்டோபர் 2

* இந்தியா சென்றுள்ள பிரேமதாசாவுக்கு புதுடில்லியில் வரவேற்பு வழங்கப் பட்டது.

* வெலிஓயாவில் 15 மக்களும், 4 படையினரும் புலிகளின் தாக்குதலில் பலி என அரச அறிவிப்பு.

* 'புலிகளுடன் அரச பேசுகிறதா' என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்கு அமைச்சர்கள் மௌனம்.

* கோதுமை மா 50 சதத்தால் விலை குறைக்கப் பட்டுள்ளது. (புதிய விலை ரூ.11.75)

ஒக்டோபர் 3

* கட்டைக்காடு முகாம் புலிகளால் அழிக்கப் பட்டது. 13பேர் பலி. பெருமளவு ஆயுதங்கள் மீட்பு.

ஒக்டோபர் 5

* அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் 20,000பேர் தங்கக்கூடிய அகதிகள் முகாம் ஒன்று வவுனியா ஆசிகுளத்தில் அமைக்கப்பட உள்ளது.

* ஹட்டன் ஆடைத் தொழிற்சாலைப் படி விழுந்து 50பேர் காயம்.

* கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் 30ஆயிரம் பாடசாலைச் சிறுவர் போதைப் பொருட்களுக்கு அடிமையாக உள்ளனர். 11லட்சம் சிறுவர்கள் (நாடு முழுவதிலும்) பாடசாலைக்குச் செல்லவில்லை. சிறுவேலைகளில் 50,000பேர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

ஒக்டோபர் 6

* உன்னிச்சையில் நிகழ்ந்த மோதலில் 5புலிகள் பலி என அரச அறிவிப்பு.

* இனப்பிரச்சனைக்கு உரிய அரசியல் தீர்வை முன்வைக்குமாறு 13 எதிர்க்கட்சிகள் கோரவுள்ளன.

* களுத்துறையில் 1000ரூ. கள்ளநோட்டுகள் பாவனையில் உள்ளன.

# செய்திகள்

கொழும்பில் மரணமானார்.

* வடக்கே செல்ல லொறிகள் அனுமதி மறுக்கப் படுவதால் அங்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

* 15லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோய்ன் கடத்திய வடக்குப் பெண்மணி தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளார்.

* இரண்டு மாதங்களில் 14 யானைகள் தந்தத்திற்காகக் கொல்லப் பட்டுள்ளன.

ஒக்டோபர் 15

* மட்டக்களப்பிற்கு விஜயம் செய்த அவுஸ்திரேலியத் தூதுவர் தனது சொந்தப் பணத்தில் அகதிச் சிறுவர்களுக்கு உதவி வழங்கினார்.

* வடக்கு கிழக்கு தனித்தனி மாகாண சபைகளாகவும், இரண்டு சபைகளும் இணைந்து பிராந்திய சபைகளாகவும், இரு மாகாண சபைகளுக்கும் நிறைவேற்று மந்திரிகளும், இணைந்த பிராந்திய சபைக்கு முதலமைச்சரும் தெரிவு செய்யப்படும் அமைப்பொன்று இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முன்வைக்கப் பட்டுள்ளது.

எல்லைப் பாதுகாப்புப் படையை 5,000 பேரைத் திரட்டி அமைக்க அரச தீர்மானம்.

ஒக்டோபர் 20

* பொலனறுவையில் படுகொலைகள் நிகழ்ந்த இடங்களுக்கு பிரேமதாசா நேரில் விஜயம்.

* கொழும்பில் பிக்பொக்கட் மன்னன் 'சுனில்' கைது, ஒருலட்சம் பணம் மீட்பு.

ஒக்டோபர் 21

* பொலனறுவைப் படுகொலைகளை எதிர்த்து கொழும்புப் பல்கலைக்கழக மாணவர் ஊர்வலம். ஊர்வலத்தில் பிரபாகரனின் கொடும்பாவியும் இடம்பெற்றது. 'புலியே படுகொலைகளை நிறுத்து', 'அஷ்ரப்! அரசின் ஆதரவை வாபஸ்பெறு', 'மு.கொ, த.வி.கூ, சு.க, ஐ.சோ.மு - பாராளுமன்றத்தைப் பகிஷ்கரி' போன்ற கோஷங்களும் எழுப்பப் பட்டன.

* 'புலிகளுடன் அரசு பேசலாம், ஆனால் இரகசியம் வேண்டாம்' - அநுரா.

ஒக்டோபர் 22

* 'முஸ்லிம்களைக் கொல்லப் புலிகளுக்கு மொசாட் ஆயுதம் வழங்குகிறது என்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரமில்லை' - பிரதமர் விஜேதுங்கா.

ஒக்டோபர் 23

* புல்மோட்டை, ஆனையிறவில் 14 படையினர் பலி.

* நாடு முழுவதும் ஹர்த்தால் அனுஷ்டிக்க முஸ்லிம் கொங்கிரஸ் வேண்டுகோள். கொழும்பில் பொலிஸ் உசார் நிலையில்.

ஒக்டோபர் 24

* நேற்றைய ஹர்த்தாலில் பல பகுதிகளில் கடையடைப்பு. கொழும்பில் சில அசம்பாவிதங்கள்.

ஒக்டோபர் 26

* மட்டக்களப்பில் இரு தினங்கள் முன்னதாக ஏழு புலிகள் பலி என அரசு அறிவிப்பு.

ஒக்டோபர் 27

* உயிலங்குளத்தில் ஐந்து படையினர் பலி.

* கொழும்பில் தமிழ் இயக்கப் பெயரால் கொள்ளைகள் நிகழ்வதாக ஈபிடிபி எச்சரித்துள்ளது.

www.tamilarangam.net

www.tamilarangam.net

ஒக்டோபர் 7

* கிளாலியில் மக்கள் பயணம் செய்த படகுகள்மீது தாக்குதல் நிகழ்த்தப் பட்டுள்ளது.

* அடுத்த நிதியாண்டில் 10,000கோடி ரூபா வருமானமாகவும், 16,700கோடி ரூபா செலவாகவும் இருக்கும். பாதுகாப்பிற்கு 1,800கோடி ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது.

ஒக்டோபர் 8

* இலங்கையில் வருமானவரி செலுத்துவோரின் எண்ணிக்கை 15,000ஆல் குறைந்துள்ளது.

* வவுனியா அகதிமுகாமில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஒக்டோபர் 9

* ஆனையிறவுப் பாதை திறக்கப்பட்டால், அதனைப் பாவித்து குடாநாட்டின்மீது தாக்குதல் நடத்த மாட்டோம் எனப் படையினர் தரப்பில் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

ஒக்டோபர் 10

* தமிழகத்திலிருந்து ஈழ அகதிகள் திருப்பி அனுப்பல் இடைநிறுத்தம்.

* வாழைச்சேனையில் தேனீர்க்கடை ஒன்றில் குண்டு வெடித்து ஒருவர் பலி.

ஒக்டோபர் 12

* கேரளாவில் கடும்மழை வெள்ளம், அறுபதுபேர் பலி.

* கிளாலியில் பயணிகள்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் எட்டுப் பேரைக் காணவில்லை.

ஒக்டோபர் 13

* கல்முனை அகதிகள் வெள்ளத்தால் அவதியுறுகின்றனர்.

* வடபகுதிக் கிராம உத்தியோகத்தர்களுக்கு டோர்ச் லைற், சைக்கிள் தேவை எனக் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

ஒக்டோபர் 14

* 'இலங்கை இந்திய உறவு முன்பைவிட வளர்கிறது' – ஆனமடுவவில் பிரேமதாசா

* எயிட்ஸ் நோயாளி எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர்

ஒக்டோபர் 16

* பொலனறுவை மாவட்டத்தில் 150க்கு மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர்.

* இனப்பிரச்சனையைப் பேச்சுகள் மூலம் தீர்க்குமாறு தென்னாசியாவுக்கான பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

* தமிழக அகதிகளுக்கு ஐம்பது கோடி ரூபாய் மத்திய அரசால் வழங்கப்படும்.

ஒக்டோபர் 17

* பொலனறுவைப் படுகொலைகள் பற்றி விசாரிக்கத் தனிநபர் குழு நியமனம்.

* 'அரசைத் தாக்கவென்றே முப்பது பத்திரிகைகள் வெளிவருகின்றன.' – பிரேமதாசா

ஒக்டோபர் 19

* வடபிராந்திய ராணுவ தளபதியாக பிரிகேடியர் ஆர்.எஸ்.தலுவத்த, யாழ் கொமாண்டராக பிரிகேடியர் கெமுனு குலதுங்கா நியமனம்.

* சிங்கள முஸ்லிம் கிராமங்களுக்குத் தனியான



* சிறீலங்கா மக்கள் கட்சி என்ற புதிய கட்சி உதயம்.

* கறுப்பு வெள்ளியன்று (ஒக்.23) கொழும்பில் தமிழர் மீதான வன்செயல்கள் பற்றி விசாரணை நிகழ்த்தப்பட்டு, குற்றமிழைத்தோருக்குத் தண்டனை வழங்கப்படும் என ரெலோவிடம் சிறில் ரணதுங்கா உறுதியளிப்பு.

ஒக்டோபர் 28

* கிழக்கிற்கு நேரில் சென்று, பாதுகாப்பு நிலைகள்பற்றிப் பிரதமர் ஆய்வு.

ஒக்டோபர் 29

* ரி.வி.க்குள் இருந்த குண்டு ஒன்று வெடித்து, ஒருவர் பலியான சம்பவம் மட்டக்களப்பில் நிகழ்ந்தது.

* பிரதமர் விஜேதுங்க ராணுவம் மீட்ட பகுதிகளுக்கு விஜயம். வடக்கில் ராணுவம் மீட்ட பகுதிகளுக்கு புதிய மேலதிக அரச அதிபர் நியமனம்.

* கொக்கட்டிச்சோலைப் பகுதியில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் பற்றி விசாரிக்கும் ராணுவம், லெப்டினண்ட் எச்ஜஎஸ்.குடலிகம என்ற படையதிகாரியை இச்சம்பவத்தில் குற்றவாளியாகக் கண்டது.

* யாழ்ப்பாண நகர வீதிகளில் மண்ணெய் விளக்கு வைக்க மாநகரசபை தீர்மானித்துள்ளது.

ஒக்டோபர் 30

* குடாநாட்டில் புலிகளின் முகாம்கள் தாக்கப்படுவதாக அரசு அறிவிப்பு.

* புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று சிங்கள மீனவர்கள் விடுதலை.


ஒக்டோபர் 31

* கிழக்கிலுள்ள தமிழ்க் கிராமமான காக்காச்சிவட்டையில் 19ஆம் திகதி கைதான 91பேரில் 45பேர் பற்றித் தமக்கு எதுவும் தெரியாது எனவும், 46பேர் தமது முகாமில் இருப்பதாகவும் ராணுவம் கூறியுள்ளது. இதே கிராமத்தில் இருந்து, 23ஆம் திகதி கைதான பன்னிருவர் சடலங்களாகவே மீட்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உழைக்க வந்தவர் நாம்



தீபட்டுப் புகையுடன் மேலெழுந்து
மேற்குநோக்கி
மேகங்கள்மீது பயணம் செய்து
ஐரோப்பிய தேசம் கண்டு குதித்தவன்
அரையும் குறையுமாக
கூட்டியும் குறைத்தும்
தீயின் கதை சொல்வான்.

குழப்பமுற்ற குடிவரவு அதிகாரி கேட்டான்,
"நீ அரசியல் அகதியோ
அன்றேல் பொருளியல் அகதியோ?"

மனையும், காரும்
தங்கத்தில் வடச்சங்கிலியும்
டிவி, வீடியோ எல்லாமும் சேரும்.

ஊரில் கண்ட காணியில்
எழுந்துநிற்கும் கல்வீடும்
ஊரெங்கும் குடும்பத்தின் பெருமை பேசும்.
பொழுதுபட

www.tamilarangam.net

'பார் அவனை!
கிண்டல் பண்ணிக் கேட்கிறான்.
தூ! நிறவாதியவன்
எம் நாட்டின் கதை அறியானோ
கொடிதுயரும் அறியானோ?
அரசியல் சுட்ட தீக்காயங்கள்
எம்மவர் உடல்மீது வலிகொண்ட
சாட்சியமும் உண்டல்லவோ?'

கோபமுற்றுக் குதித்துமவன்
'அவனை' நம்பவைக்கத்
தலையாலும் நடக்கத் தயாராவான்.
"பொருளியல் அகதியென்பது என்னவோ?
யான் அறியேன்,
சத்தியமாய் நான் அரசியல் அகதிதான்!"

கிழக்கிலிருந்து மேற்காக
நாட்கள் ஓடி
வினாடி போல் கரையும்.

கையில் பாஸ்போட்டும்
மெய்யில் இரண்டு வேலையுமாக
ஓடுகிறது பொழுது
கையில் காசைக் குவித்து.

பியர்ப் போத்தலும், பெண்ணும்,
வீடியோச் சினிமாவும் கும்மாளமுமாக
குதூகலித்த ஓர் நாளில்
வந்துகேட்டனர்.
"தாய்நாட்டில்
பிரச்சனை முற்றிச் சாபவர் தினம்,
உதவி உழைப்பீர் அவர் உயிர்காக்க"

தடுக்கி எழுந்தே நடிப்பான்
போதை இல்லாதபோதும்
"நாமுண்டு, எம்பாடுண்டு
வெளியுலகிற்கு வந்தும் அரசியல் எதற்கு?
விட்டுத் தொலையும்
நாம் உழைக்க வந்தவர்
நீண்ட பயணத்தில் அரசியல் காவுதல் பாவம்
இந்தாரும் போத்தல்
குடித்து மறப்பீர்
அல்லது தொலைந்துபோவீர்!"

காசும், பொழுதும், போத்தலுமாக
எண்ணிக் கரையும் நாட்களிடையே
நீண்ட இருளும்
நீண்ட குளிரும்
குரல்வளை நசித்த ஓரிரவில்
திக்குமுக்காடி எழுந்தனன்.
'தாயும், சகோதரரும், இனசனமும்
குண்டோடு போயினரோ?'

இருள் சிரித்துச் சொல்லும்
'தாமதித்த
நிமிடங்கள் ஒவ்வொன்றுக்குமாய்
தலைநகரிலிருந்து
தலைசீவக் குண்டுவரும் காலமிது'
தலைகீழாய் நின்றிடினும்
இறந்தவர்தான் மீள்வாரோ?
செத்த நாட்களும்தான் மீண்டிடுமோ?

சகலமும் முடிந்தபின் அழுதென்ன?
ஒப்பாரி வைத்தென்ன?

சமூகம் விற்றுப் பிழைத்து
இழிசனமாய்த் தேய்ந்த நாட்கள்
இனியும் வேண்டாம்.

விழி,
இனியாகிலும் விழி.

தேடு
உறவைத் தேடு
காற்றில், இருளில்
உணர்வில்
எல்லாவற்றிலும் தேடு
ஓய்வின்றித் தேடு!"

**●சின்னா.**
**வைகாசி 92**


www.tamilarangam.net

தான் வாழும் சமூகத்தை விமர்சிக்கும் பொறுப்பைப் பல கலைஞர்கள் தெளிவான சிந்தனையோடு ஏற்றுக் கொள்கிறார்கள். இவர்களில் பலர் அவ்வாறு விமர்சிப்பதற்கான பரிசாகத் தண்டனையும் பெறுகின்றனர். எவ்வாறாயினும் ஒரு கலைஞன் தான் வாழும் சமூகம் பற்றிய அக்கறை, அவதானிப்புகள், விமர்சனங்கள் இல்லாமல் இருக்க முடியாது. பல்கேரியாவைச் சேர்ந்த அன்றி குலேவ் (**Anri Kulev**) இவ்வாறான ஒரு ஓவியர்.


அரசியற் கேலிச் சித்திரங்களைப் பெரிதும் விரும்பிப் படைக்கும் குலேவ் 1989க்கு முன் பல்கேரியாவில் ஆட்சியில் இருந்த ருடோர் ஸிவ்கொவ்வின் (**Tudor Zhivkov**) 'விரும்பப் படாதோர் பட்டியலி'ல் இருந்தார். அப்போது இவரது படைப்புகள், அவை வெளிப்படுத்திய சமூக விமர்சனத்திற்காகப் பல தடவை தணிக்கை செய்யப்பட்டன.

அப்போதைய பல்கேரிய ஆட்சியில் நிலவிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மறைமுகமாகச் செயற்பட்டவர்களில் குலேவ் மற்றும் அவரது முக்கிய நண்பர் ஸ்ரெபன் ஸானேவ் (**Stefan**

# கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஒரு கிண்டல் ஓவியர்!










www.tamilarangam.net

Zanev) என்போர் முக்கியமானவர்கள். பல்கேரியத் தலைநகர் சோ.:.பியாவில் உள்ள திரைப்பட - காட்டுன் கலைக்கழகத்தில் பயின்ற குலேவ்வின் படைப்புகள் அதியதார்த்தத் தன்மை கொண்டன.

இங்கு வெளியாகும் அவரது அண்மைக்காலப் படைப்புகள் 'இன்டெக்ஸ் ஒண் சென்சஷிப்' (Index on Censorship) என்ற ஆங்கில சஞ்சிகைக்காகப் பிரத்தியேகமாக வரையப் பட்டவை.

அபிமன்யு ●












www.tamilarangam.net




## பொபிபிசர்

எழுபதுகளில் பிரபலமானவர் பொபிபிசர். விளையாட்டுக்களில் அதிகம் மூளையைக் கசக்கிப் பிழிந்து விளையாடவேண்டிய விளையாட்டு 'செஸ்'. எழுபதுகளில் சிறுவர்களில் கெட்டிக்காரர்களை மூளைசாலிகளை குட்டி 'பொபிபிசர்' என்று செல்லமாக மற்றவர்கள் அழைப்பதுண்டு. பொபிபிசர் ஏற்கனவே உலக செஸ் சம்பியனாக வந்தவர். இவர் ஏழாவது தடவையாக இந்த முறையும் உலக சம்பியனாக வந்துள்ளார். பல தடவை உலக சம்பியனாக வந்து பொபிபிசர் சாதனை புரிந்துள்ளார். 'தமிழர்கள்' மூளைசாலிகள் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால் தமிழர்களிடையே ஏன் இந்த மூளையைப் பாவிக்கும் செஸ் விளையாட்டுத்துறை அதிகம் பிரபலமாகவில்லை. இவர்களால் ஏன் உலகசாதனை அளவுக்குப் போகமுடியவில்லை. இனிவரும் காலத்திலாவது இதைச் செய்து காட்ட வேண்டும்.

- வீரன் -

## குவைத்தில் இலங்கைப் பெண்கள்மீது வன்முறை

மத்தியகிழக்கில் நிகழும் மனித உரிமைகள் பற்றி, மிடில் ஈஸ்ற் வோச் (Middle East Watch) என்ற மனித உரிமை அமைப்பு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குவைத்தில் வீட்டுப் பணிப்பெண்கள் மிகத் துன்புறுத்தப் படுவதாகக் கூறியுள்ளது. இங்கு எசமானர்களால் துன்புறுத்தப் படுவது தாங்காமல், குவைத்தை அமெரிக்கா விடுவித்தபின் மாத்திரம் 2,000 பணிப்பெண்கள் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்றுள்ளனர். அண்மையில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தில், பலமுறை பாலியற் பலாத்காரத்துக்கு உட்படுத்தப்பட்ட ஒரு இலங்கைப் பெண், மாடியில் இருந்து வீதியில் தூக்கி வீசப்பட்டுத் தமது கால்கள் உடைந்த நிலையில் இலங்கை திரும்பியுள்ளார்.

சிவன்

**தாயகம்**

கனடாவில் இருந்து வெளிவரும் வாராந்தச் செய்தி இதழ். சந்தா 50டொலர்கள் (வருடத்திற்கு) தொடர்புகள்: Georgicka Communications, Post box 1031, Station 'F', Toronto, Ont, M4Y 2T7, CANADA.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# எப்பொருள் யார்வாய் கேட்பினும்...



துருவச்சி

**கவிராயரின் புரியாத புதிர்கள்**

புரியாத புதிர் 10

பெரிய ஆட்களாக நிலைநிறுத்த சின்னத்தனமான வழி உண்டோ?

கவிராயர் சற்று மகிழ்ச்சியாகவே இருந்தார். எனக்குப் புரியவில்லை. மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன். "என்ன கவிராயர் சற்றுச் சந்தோசமாக இருக்கிறீர்?" என்றேன். "தம்பி நான் சந்தோசமாக இருக்க இல்லை, போனமுறை நான் சொன்ன விசயம் பலரைச் சிந்திக்க வைச்சிருக்கு. அது ஒரு வகையில் சந்தோசமாக இருக்கு. ஆனாலும்...." என்று இழுத்தார். "என்ன ஆனாலும்...." என்றேன்.

"இல்லை, ஒருத்தர் என்னட்ட வந்து 'என்ன இருந்தாலும் நாங்கள் எங்கட பழசுகளை விடலாமே? எல்லாரும் வெளிநாடு காசு, படிப்பு, எண்டு முன்னேறி விட்டாங்கள். வெளிநாட்டில் எல்லாரும் சமன் என்றநிலை இருக்கு, எங்களாலை வெள்ளையனோட போட்டி போட முடியாத நிலைமை. எங்கட ஸ்ரேற்றசை, நாங்கள் பெரிய ஆக்கள் எண்டதை சாதிய வைச்சு'மட்டும்'தானே இங்க எங்களப் பெரிய ஆக்கள் எண்டு நிறுத்தக் கூடியதா இருக்கு. ஆகவே எப்படி அதை விடுகிறது?' என்று கேட்டார். பார்த்தீரே எப்பிடிச் சிந்திக்கினம் எண்டு?"

இன்னொருத்தர் சொன்னார். 'நான் விட்டிடுவன், என்ர ஆக்கள் என்னைப் பிறகு ஏற்காயினம்' எண்டு தலையைச் சொறிஞ்சார். நான் சொன்னன், இப்பிடித்தான் பெரும்பாலானவர்கள்

விசித்திர கவிராயருக்கு ஓரளவு சில விசயங்கள் தெரியும். மனிதனை மனிதன் கொல்வது சரியென அவர் ஒப்புக் கொள்வதில்லை.

மற்ற சொந்த பந்தக்காரர் ஏதும் நினைப்பினம் எண்டு சும்மா இருப்பினம், உள்ளுக்க விருப்பும் இல்லாமலும் இல்லை. எல்லாருக்கும் இப்பிடி உள்ளுக்க விளங்கினாலும் முதல்காலடி எடுத்து வைக்கத்தான் யோசிக்கினம். மனசு சுத்தமும் நேர்மையும் இருந்தால் ஒரு சின்னக் காலடி எடுத்து வைக்கிறது ஒரு பிரச்சனையே?" என்று கேட்டார் கவிராயர்.

[illegible]

"தம்பி உனக்கு ஒரு முசப்பாத்தியான விசயம் சொல்லவேணும் எண்டு மறந்துபோச்சு" என்றார் கவிராயர்.

"என்ன விசயம் சொல்லுங்கோ" என்றேன்.

"[illegible] அரசியல் [illegible] கதைக்கினம். அதில பாரும் சிங்கள ஆக்கள், ஈழத்தைப் பிரிச்சுக் கேட்டா 'ஐயையோ பிரிவினையே கூடாது' எண்டுகினம். பின்னை வடக்கு கிழக்கு இணைஞ்ச சமஷ்டி கேட்டா, 'ஐயையோ, வடக்கு கிழக்கைப் பிரி பிரி' என்கினம். இரண்டில ஒண்டு தெளிவா இருக்க வேணும். பிரிக்கிறதெண்டா மற்றப் பிரிவினையும் (ஈழம்) சரி எண்டவேணும். [illegible] இணைஞ்சு இருக்கிறதெண்டா, [illegible] கிழக்கும் [illegible] இருக்க வேணும் எண்டு சொல்லவேணும். [illegible] இப்பிடி இரட்டை வேஷம் போடுகினம்?" என்று கேட்டார்.

அதுதானே, ஏன்?

மணி

www.tamilarangam.net

## அயோத்தி – இந்தியாவின் தலைகுனிவு!

இந்துமத வெறியர்களால் அயோத்தியில் முஸ்லிம் மக்களின் வழிபாட்டுத் தலமான பாபர் மசூதி தரைமட்டமாக்கப் பட்டிருக்கிறது; இராமரின் பெயரால் ஒரு கோயில் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது.

இந்தியா எங்கணும் நீண்டகாலம் சர்ச்சைக்கு உள்ளாக்கப்பட்ட பல வழிபாட்டுத் தலங்களில் அயோத்தியும் ஒன்று. ராமர் பிறந்த இடம் என்று இந்து மதவாதிகளால் காட்டப்படும் இந்த இடத்தில் பல நூற்றாண்டுகள் நின்ற ஒரு மசூதி, ஒருசில மணிநேரத்தில் தரைமட்டமாகி, இந்தியாவின் மதசார்பின்மையைக் கேள்விக்குறியாக்கியதுடன், மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு இந்தியனையும் தலைகுனிய வைத்திருக்கிறது. இராமாயணம் உண்மையில் நிகழ்ந்த கதையல்ல என்றபோதும், அவ்வாறு நிகழ்ந்திருந்தாலும் அதற்கான ஆதாரங்களோ, அது நிகழ்ந்த இடங்களைக் காட்டும் எந்த வரலாற்றுத் தடயமோ இதுவரை கிடையாதபோதும், இதுதான் ராமர் பிறந்த இடம் என்று அயோத்தியைக் காட்டி வாதிடும் இந்து வெறியர்களின் செயலால், பல ஆயிரம் உயிர்கள் பலியிடப் பட்டுள்ளன; முக்கியம் வாய்ந்த பல மதவழிபாட்டுத் தலங்கள் வெவ்வேறிடங்களில் அழிக்கப் பட்டுள்ளன.

மசூதி இடிக்கப்பட, இந்துக் கோயில் ஒன்றை அழித்து மசூதி கட்டப்பட்டது என்ற காரணத்தைக் காட்டுபவர்கள், இந்தியா முழுவதும் எத்தனை இந்துக் கோயில்கள் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை இடித்துக் கட்டப்பட்டன என்பதை அறியாமல் இருக்கிறார்களா? வரலாற்றில் இவ்வாறு இந்துக்கள் செய்த தவறுக்காக அந்தக் கோயில்களை இடித்துக் கட்டவேண்டும் என்று யாராவது கூறினால் அது ஏற்கக்கூடியதாக இருக்குமா? இதே மசூதி இடிப்புக்கு எதிராக வேறு நாடுகளிலும் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன. இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. இதனையும் எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இப்போது நிகழ்ந்துள்ள அனர்த்தத்திற்கு பாரதீய ஜனதாக் கட்சியும், மற்றைய இந்துமதத் தீவிரவாத அமைப்புகளும் நேரடியாகக் காரணம் எனினும், மதவெறியை ஆரம்பித்து அதன்மூலம் அரசியல் லாபம் காண முயன்ற இந்திரா கொங்கிரசும் அவ்வாறான ஏனைய கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். மதச்சார்பின்மை என்ற போர்வையில் இந்துக்களின் நலம் பேணும் அரசும், கட்சிகளும் இந்த அனர்த்தத்திற்கு மறைமுகமாகக் காரணமாக இருந்திருக்கின்றன. மசூதி இடிக்கப்பட்டது ஒரு தினத்தில் திடீரென நிகழ்ந்த சம்பவமல்ல. இதன் பின்னணியில் நீண்டகாலம் அரசியல் நடத்திய அனைவரும், இந்தப் பிரச்சனையைச் சரியான முறையில் தீர்த்து மசூதியைப் பாதுகாக்க முடியாத அரசும்

சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாத இதழ்
ஸ்தாபிதம்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோனர்கள்

முகவரி:
Herslbs gt43
0578 Oslo

நடந்த சம்பவத்திற்கு முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு ஒரு சவாலாக நிகழ்ந்த இந்த மசூதி இடிப்பைத் தமிழகத்தின் பெரும்பாலான பத்திரிகைகள் கண்டனம் செய்தமை வரவேற்கத் தக்க அம்சமாகும். மசூதி இடிக்கப்படக் காரணங்களில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் பொறுப்பற்ற பேச்சும் ஒரு காரணமாகும். ஆயினும் தமிழக அரசே மசூதி இடிக்கப்பட்டதைக் கண்டித்து துக்கதினம் அனுஷ்டிக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படப் பத்திரிகைகளின் உறுதியான போக்கு காரணமாகியது. இந்நிலையைப் பத்திரிகைகள் தொடரவேண்டும்.

முஸ்லிம் மக்களின் உணர்வுகள் மதிக்கப்பட்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் பாபர் மசூதிப் பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும். இதற்குத் தமிழகப் பத்திரிகைகளும், மக்களும் ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டுத் தீர்வுக்கு உதவவேண்டும்.

## ஹாரைட் – புதிய கேள்விகள்!

அண்மையில் முகமூடி அணிந்த நோர்வே இளைஞர்கள் நால்வர், தமிழ் அகதிக் குடும்பமொன்றின் வீடொன்றில் புகுந்து தமிழ் அகதி ஒருவரைத் தாக்கிய சம்பவம், நோர்வே முழுவதையும் பெரும் பரபரப்பிற்கு உள்ளாக்கியது. ஹாரைட்டில் நிகழ்ந்த இந்தச் சம்பவத்தின் பின்னணி இதுவரையும் முற்றாகத் தெளிவாக்கப்பட வில்லை.

தாக்குதல் இருமுறை நிகழ்த்தப் பட்டமையும், தாக்குதல் திட்டமிடப்பட்ட முறையில் நிகழ்த்தப் பட்டமையும், தாக்குதல் புதுவருடத் தினத்தன்றும் நிகழ்த்தப் பட்டமையும், தாக்கப்பட்டவர் மிக மோசமாகத் தாக்கப்பட்டமையும் தாக்குதல் பற்றி ஏற்பட்ட பரபரப்புக்கு முக்கிய காரணங்களாகும்.

இந்தத் தாக்குதல் பற்றிப் பரந்தளவில் கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட தமிழ்க் குடும்பத்திற்குத் தமது ஆதரவை அப்பகுதி நோர்வேஜிய மக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் பாதிக்கப் பட்டவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பூசையில், தேவாலயத்தினுள் நிற்க முடியாத அளவில் மக்கள் திரண்டு வந்தனர். இது, இங்கு அகதிகளாக வந்த தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று நோர்வேஜிய மக்கள் கொண்டுள்ள அக்கறையைக் காட்டுகிறது. இது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பல விவாதங்களும், வழக்கும் செய்திகளில் இடம்பிடித்து வருகின்றன. இவற்றின் முடிவு எதுவாயினும் இருக்கலாம். ஆயினும் வன்முறையைக் கண்டிப்பதில் – நோர்வேஜிய மக்களாயினும் சரி, தமிழ் மக்களாயினும் சரி – யாரும் பின்னிற்கக் கூடாது. இந்தச் சம்பவம் நோர்வே பாதுகாப்பானது என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பொடியாக்கியிருக்கிறது. சம்பவத்தின் பின்பான, தாக்குதல் தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நோர்வேஜிய மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தமிழ் மக்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் பின்னிற்காமல் ஈடுபட வேண்டும்.

சுவடுகள் இங்கு நிகழும் வன்முறைகளைக் கண்டித்து வந்திருக்கிறது. இந்த வன்முறையையும் சுவடுகள் வன்மையாகக் கண்டிப்பதுடன், வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்குத் தனது ஆதரவையும், இவ்வன்முறையைக் கண்டிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நோர்வேஜிய மக்களுக்கு நன்றியையும் தெரிவிக்கிறது.

## கிளாலி – ஒரு மரணப்பொறி

இந்தத் தலையங்கத்தை எழுதிக் கொண்டிருக்கையில் கிளாலியில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட செய்தி ஒரு கணம் நெஞ்சை அதிரச் செய்கிறது. எவ்விதப் பாதுகாப்பும் இல்லாமல் தப்பி ஓடும் வழியும் தெரியாமல் நடுக்கடலில் பயணிகள் கோரமான முறையில் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாக்கப் பட்டுள்ளனர்.

இலங்கை அரசு செய்யும் படுகொலைகளின் வரிசையில் இது ஆச்சரியம் தரும் ஒன்றல்ல. காலம் காலமாக வடக்கிலும் கிழக்கிலும் ஒன்றுமறியாத அப்பாவிகளைப் படுகொலை செய்தபடியே, புலிகளுக்கு எதிரான யுத்தம் இது என அரசு நாடகமாடி வருகிறது. ஒருபுறம் யுத்தத்தில் மக்களைப் படுகொலை செய்தபடி, 'நாம் சமாதானத் தீர்வில் நம்பிக்கை கொண்டிருக்கிறோம், தெரிவுக்குழுவின் முடிவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்' எனப் பம்மாத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது அரசு.

இலங்கையில் தனித்தீவுபோல அநாதரவாக விடப்பட்ட யாழ்க் குடாநாட்டில் அடிப்படை வசதிகள் எதுவுமற்று மக்கள் வாழ்கின்றனர். தனது நாட்டு மக்கள் என்றே அரசு யாழ் மக்களையும் கூறினாலும், அங்கு அடிப்படை மருத்துவ வசதிகளோ போதிய உணவு வசதிகளோ இல்லை. இந்நிலையில் தமது முக்கிய தேவைகளுக்காக நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் உரிமையும் மறுக்கப் பட்டவர்களாகவே யாழ் மக்கள் உள்ளனர். இந்தத் தாக்குதல் மூலம் யாழ் மக்களைக் குறைந்த பட்சம் மதிக்கும் எண்ணமும் தனக்கில்லை என்பதை மீண்டும் அரசு நிரூபித்துள்ளது.

இந்த அரசு உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, நியாயபூர்வமான அரசியற் தீர்வை முன்வைத்து, தமிழ் மக்களை சகல உரிமைகளுடன் கௌரவமாக வாழச் செய்ய மறுப்பின், நாடு பிரிவதைப் பின்போடவோ தடுக்கவோ முடியாமற் போய்விடும்.

சுவடுகள் 41
மார்கழி'92

சுவடுகள்

'Suvadukal' - Herslebsgate 43, 0578 Oslo 5, Norway

படத்தில் ஒரு purpose இருக்கணும்னு சொன்னீங்கன்னா — நீங்களாகவே ஒரு பிரச்னையை எழுப்பி, அதற்கொரு முடிவைக் காட்ட முயற்சிக்கிறீங்க?

Purpose அவசியம்தான். ஆனால் பிரச்னை அவசியமில்லே. Purposeம் பிரச்னையும் ஒன்றல்ல. பிரச்னைன்னு வந்தா அதுக்கு ஒரு முடிவையும் நானே கொடுக்கணும் என்கிறதையும் நான் ஒப்புக்கொள்ளத் தயாரா இல்லே.

முடிவு-தீர்வு சொல்லாமே —

நான் அதை உங்களுக்கு விடுகிறேன். நீங்களே கடைசி காட்சியை அமைத்துப் பாருங்க. 'வீடு' படத்திலே, last scene நீங்க எழுதணும். இந்த வீடு அவங்களுக்கு கெடைச்சுதா, இல்லையா நீங்க எழுதிக்குங்க. Audience participation. நான் விட்டுட்டேன். எனக்குத் தெரியலே. 'வண்ண வண்ணப் பூக்க'ளிலேயும் இந்தப் பொண்ணை இவன் கல்யாணம் பண்ணிப்பானா, மாட்டானா? ஒருத்தியை இழந்து, அந்த துக்கத்திலே உடைஞ்சுபோய் உட்கார்ந்திருக்கான். அப்போ அவனுக்கு வேண்டிய ஒருத்தி வந்து அனுதாபப்பட்டவுடனே அந்தப் பையனால் அழுகையை நிறுத்த

# பாலுமகேந்திராவின் தொடர்பேட்டி



''நான் ரொம்ப பசியோட இருக்கேன். ரொம்ப... ரொம்ப பசியோட. என்னைக்கும் அந்த பசி அடங்காது. அடங்கக் கூடாது. அது என் பிரார்த்தனை.''

*அதாவது, மக்கள் உங்களைத் தொடர்ந்து வரவேண்டும் — நீங்க அவங்களைத் தொடர மாட்டீங்கன்னு அர்த்தமா?*

அல்ல. இப்படிச் சொல்லிப் பாருங்களேன். வாழ்க்கையிலே இருக்கிற நிறைவின்மைகளை அவங்க தரிசிக்கட்டுமே! அவங்க சிந்திக்கட்டுமே. படைப்பாளிங்கற முறையிலே முடிவு வெச்சு, முத்தாய்ப்பு வெக்கிறதிலே எனக்கு உடன்பாடில்லே. வாழ்வியலில் எல்லாவற்றுக்குமே ஒரு அழகான முடிவு இருப்பதில்லே. அது வெறும் escapismதான்.

உதாரணமா ஒருவன் இரண்டு பெண்களோட வாழ்க்கை நடத்தறான். கல்யாணம் பண்ணின ஒருத்தி, பண்ணாமே ஒருத்தின்னு கூட வெச்சுக்கலாம். ரெண்டாவது justify பண்ணலேன்னா - Come out with your comments விமரிசியுங்க.

அதிகமா அழுக்கு சுமக்க வேண்டிய — சர்ச்சைகளுக்கு ஆளான மனிதன் நான் — for various reasons. காயப்பட்டு, காயப்பட்டு... தழும்பு கட்டியாயிடுச்சு. இனிமே நீ என்னை காயப்படுத்த முடியாது — அதிலே எனக்கு ஒரு கர்வம் இருக்கு. Try your level best. ஆனா, வளர்ந்து வர நடிகையை என்னோட சம்பந்தப்படுத்தி எழுதினா அதைப் பார்த்து ஒரு தயாரிப்பாளர் எனக்கு படம் கொடுக்காமே போயிட போறதில்லே. சோகத்திலே ஆழ்ந்து போய் என்னோட கற்பனா சக்தியும் வறண்டு போயிடப் போறதில்லை. But, அந்தப் பெண் சில தர்மசங்கடங்களை எதிர்நோக்க

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முடியலே. அந்தப் பெண் அணைச்சுக்கறா. அது ஒரு காதலியினுடைய அணைப்பல்ல; ஒரு தாயின் அணைப்பு. ஒரு ஸ்நேகத்தின் அணைப்பு. மனிதாபிமானத்தின் அணைப்பு.

இதுக்கு ஒரு பத்திரிகை "காதல் அங்கே கொச்சைப்படுத்தப் படுது"ன்னு விமரிசனம் எழுதுது. "பிரசாந்த், மௌனிகாவை அணைத்துக் கொள்ளும்போது — "பிரசாந்த் மௌனிகாவை அணைக்கல்லே, அந்தப் பொண்ணு தான் அணைச்சா... அங்கே "காதல் கொச்சைப்படுத்தப்படுது" என்று பிரபலமான வாரப் பத்திரிகை எழுதுது. விமர்சனத்துக்கு கொடுத்திருந்த தலைப்பு "வக்கிரமான சிந்தனை". இது என்னை கோபப்பட வைக்கிறது. நீங்க வேறு எதையோ விமர்சிக்கிறீங்க — என் படத்தை அல்ல!

> **"இந்த மாதிரி haphazard முடிவு வரும்போது நிறைவு ஏற்படுகிறது. Especially, group photo finishக்கு பழக்கப்பட்ட நம்ம ரசிகர்களுக்கு.**

வழக்கமான audienceக்கு அது ஏமாற்றமாக இருக்கலாம். அதைப் பற்றி எனக்கு கவலையில்லை.

பெண்ணுக்கு ஒரு குழந்தை கூட பொறந்துடுச்சு. இதுக்கு என்ன முடிவு? ஒருத்தி ஆஸ்பத்திரியிலே, இவன் கையைப் பிடிச்சு, மத்தவ கையிலே கொடுத்து செத்துப் போறதா காட்டினா அது தீர்வா? இல்லே. குழந்தையை ஒருத்தி கையிலே கொடுத்து sun setலே நடந்து போயிட்டு இருந்தா, அது தீர்வா?

> **நீங்க ஒரே நடிகையையே தொடர்ந்து படங்களிலே போடும் போது — அந்த எண்ணம் அதிகமா வலுவடைகிறது. இந்த மாதிரி செய்யற எல்லா இயக்குநர்களும் இந்த சுட்டிக் காட்டலுக்கு ஆளாயிருக்காங்க — பாலசந்தர் உட்பட!**

எனக்கு பிடிக்குது நான் போடறேன். இந்த கேரக்டரை இவர் செய்தா நல்லா இருக்கும்னு எனக்கு படுது. நான் போடறேன். அதை என் தயாரிப்பாளர் வேணும்னா ஆட்சேபிக்கலாம். இல்லாதவரை, நான் யாரை படத்தில் நடிக்க வைக்கிறேன் என்பதைப் பத்தி உனக்கென்ன? உனக்கேன் அரிக்குது? அவங்க அந்த கதாபாத்திரத்தை வேண்டியிருக்கும். ரொம்ப கொச்சையா சொன்னா — "ஏன் பாலு மகேந்திரா கிட்ட மட்டும்தான் படுப்பியா?" இந்த மாதிரி ஒரு கேள்விக்கு அவள் ஏதோ ஒரு கூட்டத்திலே பதில் சொல்ல வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

வளர்ந்துவரும் ஒரு பத்திரிகை, வளர்ச்சி வேளைகளில் இந்த மாதிரி gossip கிளைகளைப் பிடித்து ஏறி மேலே வர நினைக்கிறதைக் கூட என்னாலே புரிஞ்சுக்க முடியுது. வானளாவ வளர்ந்த பத்திரிகை — ராட்சஸ ரூபத்திலே இருக்கிற பத்திரிகை கூட இந்த மாதிரி தனி மனிதனின் விவகாரத்தை — ஆதாரமே இல்லாமே — பிரசுரித்து — what has happened to the sensitivity of that scribe? — பசுமாட்டின் பிருஷ்ட பாகத்தை கொத்தி புண்ணாக்கி, சுகிக்கும் காக்காய்களைப் போல — மனித நேயங்களை காலிலிட்டு மிதிப்பதா. ஒருவரிடமுள்ள நல்ல விஷயங்களைத் தெரிஞ்சுக்கற — அதை பாராட்டற மனமே இல்லாமே, ஏதோ மூலையிலிருக்கும் பலவீனத்தையே மோப்பம் பிடிச்சுக் கிட்டிருக்கிற nose for the stink உள்ள இவனெ நான் மனுஷனாவே ஒத்துக்கறதில்லே. இதைப்பற்றியெல்லாம் சொல்லிக்கிட்டிருந்தா no end●

**(நிறைவடைகிறது)**

www.tamilarangam.net

## ஸ்கொட்லாந்தில் ஆதிகால உயிரினம்



ஆதிகால உயிரினங்கள் அழிந்தொழிந்து போனது பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் புதிதாக ஸ்கொட்லாந்திலுள்ள ஏரி ஒன்றில் இத்தகைய உயிரினம் தற்போது வாழ்வதாக நம்பப்படுகிறது. இதற்குக் காரணம் இந்தப் படம்தான்.

இந்த உயிரினம் ஏரியில் இருக்கிறதா என்று ஆராய்ந்த முயற்சி முன்பு தோல்வியில் முடிந்தது. இப்போது இங்கிலாந்து, நோர்வே ஆய்வாளர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக மூன்றுகோடி குறோணர்கள் செலவிடப்பட உள்ளன. நீண்ட தலை உடைய இந்த ஆதிகால உயிரினத்தைக் கண்டுபிடிக்க நோர்வேயின் தொழில்நுட்பம் பயன்பட உள்ளது. இதற்காக 150 தொன் நிறையுள்ள வேகப்படகு நோர்வேயின் ஹோட்டன் நகரில் வடிவமைக்கப்பட்டு வருகிறது.

*– சேகரன் –*

## ஹவா ஹவாயி!!

உலகிலேயே மிக நீளமான நதி எது என்று கேட்டால் நீங்கள் சிலவேளை சரியாகக் கூறிவிடக்கூடும். நீளமான மலைத் தொடர், நீளமான கட்டிடம் என்று பலதரப்பட்ட விடயங்களில் நீங்கள் சரியான பதில் கூறலாம். ஆனால், நீளமான பெயர்......?

94 ஆங்கில எழுத்துகளில் ஒரு பெயர், 'மலைகளதும், பள்ளத்தாக்குகளதும் மலர்களின் நறுமணம் நிறைந்த காற்று ஹவாய் முழுவதையும் நிறைக்கிறது' எனப் பொருள்படும் அந்த ஒரு பெயர்: **Napuamahalaonaonekawehiwehionakuahiweanenewawakehoonkakehoaalekceaonanainanaiakeao – Hawaiikawao** ஹவாயில் ஒரு பெண் குழந்தைக்கு வைக்கப்பட்ட பெயர் இது!

– செங்குட்டுவன் –

ஆதாரம்: அர்பை(ய்)ட பிளா(த)

www.tamilarangam.net

# ஆயிரம் பூக்கள் மலரட்டும்

## சித்தாந்த நோய் கொண்டவர்களின்

### புனிதமான ஜனநாயகப் பற்று

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலே தெற்காசியாவில் ஒரு சிறு தீவிற்குள் இரண்டு சிறு தேசங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஒன்று தேசிய இனவிடுதலைப் போராட்டத்தில் இறங்கி இன்று ஆயுதமோகம் கொண்ட 'விடுதலைப் பயங்கரவாதிகளின்' கைகளில் சிக்குண்டு கொண்டுள்ளது. இங்கே வாழும் தமிழ்த் தேசிய இனமானது சிறீலங்கா அரசின் கொடிய இன ஒழிப்பிற்கு ஒருபுறமும், அடிப்படை ஜனநாயக சுதந்திரங்களை ஆயுதம்மூலம் பறித்து வைத்துள்ள ஆயுதக் குழுவின் கொடிய அடக்குமுறைக்கு ஒருபுறமும் முகம்கொடுத்துக் கொண்டிருக்கிறது. மறுதேசமான சிறிலங்காவிலே சிங்கள இனமானது பொருளாதார விடிவிற்காக ஒரு கொடிய அடக்குமுறை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு போராட்டத்தில் இறங்கியுள்ளது. இதில் ஆச்சரியமும் அதிர்ச்சியும் என்னவென்றால் இரண்டு தேசங்களிலும் விடிவிற்கான போராட்டம் நடத்துகிறோம் எனக் கூறிக்கொண்டு புறப்பட்டவர்களின் 'ஜனநாயகம்' மீதான அதியுயர்பற்றுத்தான் உலகம் இதுவரை காணாத ஒன்று.

கடந்த சுவடுகள் இதழ் 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்' பகுதியில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் பயன்படுத்தப்பட்ட சொற் பிரயோகங்களானது மிகவும் பயங்கரமான நிலைப்பாடுகளாகும். இக்கட்டுரையை எழுதியவர், பத்திரிகையில் கூறப்பட்ட விடயம் என்ன என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாதவராக இருந்தால் (அதாவது மொழிப் பிரச்சனை) யாராவது நோர்வீஜிய மொழி தெரிந்த ஒருவரிடம், என்ன எழுதப்பட்டது என விளக்கம் பெற்றிருக்கலாம். ஆனால் தனக்கு இஷ்டமான முறையில் சொற்பிரயோகங்களைச் செய்துள்ளார்.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி (26.04.92) வேகே (V G) பத்திரிகையில் புலிகளின் (LTTE) தமிழ் மக்கள் மீதான பயமுறுத்தல்கள் சம்பந்தமாகப் பேட்டியளித்தவர்களில் நானும் ஒருவன்.

இவர் தனது கட்டுரையில் பேட்டியளித்தவர்கள் I. தமிழர்கள் ஆட்கடத்துபவர்கள், II. தமிழர்கள் பாஸ்போட் அடிப்பவர்கள், III. தமிழர்கள் மா(f)பியாப் பாணியில் பணம் பறிப்பவர்கள்

www.tamilarangam.net

மற்றும் நோர்வேஜிய அதிகார வர்க்கத்திற்கு 'விலை போனவர்கள்' என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இவருடைய இச்சொற் பிரயோகங்களை நாம் மிக வன்மையாகக் கண்டிப்பதுடன் மட்டுமல்லாமல் இதற்கான தவறை ஏற்றுக் கொண்டு அச்சஞ்சிகையூடாக பகிரங்க மன்னிப்புக் கேட்காதவிடத்து, நாம் இவருடைய சொற்பிரயோகங்கள் சம்பந்தமாக மானநஷ்ட வழக்குத் தொடர வேண்டிவரும் என்பதையும் பகிரங்கமாக அறிவித்துக் கொள்ள விரும்புகிறோம்!

நாம் வாழும் இந்த ஜனநாயக நாட்டில் எமது சமூக அரசியல் நிலைப்பாடுகள் சம்பந்தமான கருத்துச் சுதந்திரங்கள் யாராலும் எந்த அடிப்படையிலும் பறிக்கப்படுவதை நாம் எந்த ஒரு காலகட்டத்திலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தாய்நாட்டில்தான் அரசியல் விமர்சன சுதந்திரங்களைப் பயன்படுத்தி அராஜகங்களையும் அட்டூழியங்களையும் வெளிப்படுத்தினால் துரோகி பட்டம் சூட்டப்பட்டு கொல்லப் படுகிறோம் என்றால் இங்குமா இது தொடர்கிறது? அவர் அப்படியான போலிச் சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தியதற்குப் பின்புலமாக பலரும், பல காரணிகளும் இருக்கலாம். அதையிட்டு நாம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் இப்படியான 'நாகரிகமான' பயமுறுத்தல்கட்கு, வேகே பத்திரிகையில் நாம் புலிகளின் நடவடிக்கைகள் பற்றித்தான் குறிப்பிட்டோமே தவிர தமிழ் தேசிய இனத்தை ஒரு இழிவான இனம் என்றோ சமூகவிரோதக் கும்பல் என்ற கருத்துடனோ பேட்டி கொடுக்கவில்லை. மேலும் இப்படியாக முழுத்தேசிய இனத்தையும் போராட்டத்தையும் எமது போராட்டத்தையும் எமது வெறும் அடிப்படை சுயநலன்கட்காக இழிவுபடுத்திக் காட்ட நாம் ஒன்றும், "பிரேமதாசா அதி உத்தமர், அவர் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் புரிந்து வைத்துள்ளார். அவற்றை நிச்சயம் தீர்த்து வைக்கும் ஒரு நல்ல நேர்மையான ஜனாதிபதி" என்று கூறியவர்களின் அரசியல் சித்தாந்தங்களில் மூழ்கித் தத்தளிப்பவர்கள் அல்ல. மேலும்இது சூழ்நிலை சம்பந்தமாக எமது சில கருத்துகளை முன்வைக்கக் கடமைப் பட்டுள்ளோம். கட்டுரையை எழுதிய நபரானவர் 'விடுதலைப் பயங்கரவாதிகளின்' பல ரசிகர்களில் ஒருவராக சிலவேளை இருக்கலாம்.

இதேவேளை 'சுவடுகள்' வாசகர்களுக்கு சில விடயங்களைக் கூற நாம் கடமைப் பட்டுள்ளோம்! போராட்ட களத்திலிருந்து மனித நாகரிகம் கண்டிராத முறையிலான படுபயங்கரமான கொலைகளை ஏனைய போராளிகள்மீது LTTEயினர் மேற்கொண்ட வேளையில், மயிரிழையில் உயிர்தப்பிப் பல நாடுகளுக்கு அரசியல் அடைக்கலம் தேடி ஓடிவந்த போராளிகள் பல ஆயிரம்பேர். அப்படியானவர்களில் பேட்டியளித்த நாமும் இருவர். ஆகவே அக்கட்டுரையை எழுதிய நபர் தேசிய உணர்வைப் பற்றியோ, விடுதலை உணர்வைப் பற்றியோ எமது நிலைப்பாடு என்ன என்பதை என்ன 'மூக்குச் சாத்திரம் போட்டா அறிந்தார்?'. அவர் ஒருவேளை போராட்டம் முனைப்பெய்யாத காலங்களிலேயே 'மேற்குநோக்கி' விரைந்தவராக இருக்கலாம். அதனால்தான் அவர், தனது எஜமானர்களின் புனிதமான 'தூய்மையான', அப்பழுக்கற்ற அரசியல் சித்தாந்தங்களில் தன்னை மெய்மறந்து ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் போலும்!

விடுதலைப் புலிகளை எதிர்ப்பவர்கள் யாவரும், அதாவது அவர்களின் இழிவான அரசியல் படுகொலைக் கூத்துகளை விமர்சித்து உலக சமுதாயத்திற்கு கூறுபவர்கள் எல்லாம் தேசத் துரோகிகள் என்று புலிகள் பொது அறிவிப்புச் செய்வார்கள். இது அவர்களின் அரசியல்

www.tamilarangam.net

சுவடுகளில் வெளியாகும் படைப்புகள் சுவடுகளின் கருத்தை மட்டுமே கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. மாற்றுக் கருத்துகளையும், விவாதத்திற்காகவும் கருத்துப் பரிமாற்றத்திற்காகவும் பிரசுரிக்கிறோம். இவற்றில் உள்ள கருத்துகள் தொடர்பாக வாசகர்களது கருத்துகள் வரவேற்கப் படுகின்றன.

- சுவடுகள் -

வங்குரோத்துத் தனங்களில் ஒன்று! கட்டுரையை எழுதிய நபரின் நோக்கும், சிந்தனையும் இப்படியாகத்தான் இருக்கிறது போலும். ஒரு மேற்கு நாடொன்றில் பல வருடங்களாக வாழ்ந்தும், இந்த நாட்டில் மக்களின் அடிப்படை ஜனநாயக, கருத்துச் சுதந்திரங்கள் எந்தளவுக்கு உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை இதுவரையில் கற்காதவர்களை, அவர் இங்குள்ள தமிழர்களைக் குறிப்பிட்டபடி, 'தமிழ்க் குரங்குகள்' என்று குறிப்பிடுவதில் தவறேதும் இருக்குமா என யாரையும் சிந்திக்கத் தூண்டும்.


அண்மையில் நோர்வீஜிய மொழியில் 'தேசவிரும்பிகள்' என்ற பெயரில் நாம் மூன்று பக்கங்களுடனான ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பல இடங்களுக்கு விநியோகம் செய்தோம். அதில் நாம் புலிகளை மட்டுமா விமர்சனம் செய்தோம்? வடக்கு கிழக்குவாழ் தமிழ்த் தேசிய இனத்தின் மீதான சிறிலங்கா இனவெறி அரசின் காடைத்தனமான இனப்படுகொலை நடவடிக்கைகளைத்தான் முதலாவதாகத் தெரிவித்தோம்! மேற்கு நாடுகளுக்கு போராட்ட சூழ்நிலைகளில் இருந்து நழுவிவந்து இன்று புலிகளின் ரசிகர் மன்றங்களில் அங்கம் வகிக்கும் 'புத்திஜீவிக'ளுக்கு ஒரு சித்தாந்த நோய் ஏற்பட்டுள்ளது. அதாவது 'புலிகளின் காட்டுமிராண்டித் தனமான அரசியல் படுகொலை (அப்பாவித் தமிழ் முஸ்லீம் மக்கள் மீதான படுகொலைகளைக் குறிப்பிடுகிறேன்) சாகசங்களை விமர்சிப்பவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தை நிராகரிப்பவர்கள்' இது அவர்கட்குப் புகட்டப்பட்ட சித்தாந்த அறிவியலாக ஒருவேளை இருக்கலாம்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக எமது கருத்தென்பது 'புலிகளின்' அரசியல் சித்தாந்தங்கட்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும் என்ற உளவியல் நோயினால் பாதிக்கப் பட்டவர்களில் ஒருவராகவும் கட்டுரையை எழுதியவர் இருக்கலாம்!

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைச் சரியான, தெளிவான முறையில் எடுத்துச் செல்ல சித்தாந்த ரீதியில் தெளிவுபெற்ற எந்த ஒரு சக்தியும் இன்னும் தோன்றவில்லை என்பதே எனது கருத்து. ஆயுதமோகமும் சிறிலங்கா அரசிற்கு 'பிரித்' ஓதிக்கொண்டிருக்கும் சித்தாந்தத்தையும் கொண்டவர்களாலோ அல்லது AK47ற்குள் மக்களின் அடிப்படை ஜனநாயக மற்றும் கருத்துச் சுதந்திரங்களைப் போட்டு மூடி வைத்திருப்பவர்களாலே எமது தமிழ்த் தேசிய இனத்தின் உண்மையான விடுதலையைப் பெற்றுத்தர முடியாது! ஒருவேளை இவர்கள் எதிரியைத் தோற்கடித்து, அதாவது ராணுவரீதியில் வெற்றிகொண்டு 'சுதந்திரம் அறிவித்தாலும்' அது மக்களுக்கான சுதந்திரமாக இருக்கப் போவதில்லை.

**கவிஸ்டஸ்** J.R

தேசவிரும்பிகள் சார்பில்



நம்பிக்கை – நாணயம் – உத்தரவாதம் – நியாயமான விலை
மற்றும் தரமான பொருட்களுக்கு நாடவேண்டிய இடம்
CITY TRADRES

நோர்வே அரசால் உறுதிப்படுத்தப்பட்ட
22 காரட் தங்கநகைகள்
மணிக்கூடுகள்
பாதணிகள்
ஜவுளிகள்
மின்சார உபகரணங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற
CITY TRADER

ஒஸ்லோ. குறுன்லாண்ட்.
தேடான் நிலையத்திலுள்
CITY TRADERS

www.tamilarangam.net



**புத்திரன்**



உலகில் மனித உரிமைக்காகப் போராடும் பல பொது அமைப்புகள் உள்ளன. இவை அரசுகளிடம் இருந்தும், பொது மக்களிடம் இருந்தும் பெறும் நிதியில் தமது செயற்பாடுகளைச் சுயாதீனமாக மேற்கொள்ளுகின்றன. இவ்வாறான அமைப்புகளின் நடவடிக்கைகள் சர்வதேச அரங்கில் முக்கியம் வாய்ந்தவையாகும். மிக்க பொறுப்புணர்வுடன் செயற்பட்டு வரும் இவ்வாறான அமைப்புகளில் ஒன்று, 'இன்ரநாஷனல் அலேட்' (International alert). இந்த அமைப்பின் செயலாளர் நாயகமாக இலங்கையரான குமார் ரூபசிங்ஹ அண்மையில் நியமிக்கப் பட்டுள்ளார்.

ஒஸ்லோவில் அமைதிக்கான ஆய்வு நிலையத்தில் (Peace Research Institute of Oslo/ PRIO) பணிபுரிந்து கொண்டிருந்த குமார் ரூபசிங்ஹ அண்மையில் லண்டன் சென்று தனது புதிய பதவியை ஏற்கவுள்ளார். கடந்த பத்து வருடங்களாக நோர்வேயில் வசிக்கும் குமார், அடுத்த மூன்று வருடங்கள் இன்ரநாஷனல் அலேட்டின் செயலாளர் பதவியில் இருப்பார். லண்டனில் இவர் தனது புதிய பதவியை ஏற்கும்போது, இவர் தனது நோர்வேஜிய மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கு வாழத் திட்டமிட்டுள்ளார். எனினும் இந்த மூன்று வருடங்கள் வெளிநாட்டில் வாழ்வதற்கான அனுமதியைத் தனது அமைதி ஆய்வு நிலையத்திடமிருந்து பெற்றுக் கொண்டே இவர் செல்கிறார்.

இவர் இவ்வாறு உயர்பதவி ஒன்றைப் பெற்றுச் செல்வதையொட்டி அண்மையில் முன்னணி நோர்வேஜியப் பத்திரிகை ஒன்று அவரது பேட்டியை வெளியிட்டது. சர்வதேச

www.tamilarangam.net

மன்னிப்புச்சபையின் முன்னாள் செயலாளர் நாயகம் மாட்டின் என்னல்ஸ் 1985இல் ஆரம்பித்தது இன்ரநாஷனல் அலேட். இந்த அமைப்பு உலகில் சிறுபான்மையினர் ஒடுக்கப்படுவது பற்றியும், அதனால் தோன்றும் உள்நாட்டு யுத்தங்கள் பற்றியும் முன்கூட்டியே சம்பந்தப் பட்டோருக்கு எச்சரித்து வருகிறது. அத்துடன், யுத்த சூழல்களில் சமாதானத் தீர்வுகளுக்காகப் பாடுபட்டு வருகிறது.

நீண்ட நாட்களுக்கு முன்பே யூகோஸ்லாவியாவில் தோன்றக்கூடிய அபாயம் பற்றி அமைப்பு எச்சரித்தது. ஐ.நா. அகதிகள் உயர் ஸ்தானிகராலயம் மற்றும் பல அரசுகளுக்கு இதுபற்றி அறிவிக்கப்பட்டது. ஆனால் எவரும் இதுபற்றிக் கவலை கொள்ளவில்லை, தற்போது இந்தப் பிரச்சனை பெரிதாக வளர்ந்துள்ளது. பத்து லட்சத்துக்கு மேற்பட்டோர் அகதிகளாக்கப் பட்டுள்ளனர்.

தற்போது பழைய சோவியத் யூனியனில் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் பற்றி அமைப்பு ஆராய்ந்து வருகிறது. தற்போதைய ரஷ்யாவுக்கு வெளியே இரண்டரைக் கோடி ரஷ்யர்கள் வாழ்கின்றனர். இது அப்பகுதிகளில் பெரும் பிரச்சனைகளை உருவாக்கும். அடுத்துவரும் சில வருடங்களில் பழைய சோவியத் யூனியனில் இருந்து குறைந்தது ஒருகோடி மக்கள் அகதிகளாக்கப் படுவார்கள், அங்குள்ள தேசிய எழுச்சிகள் இதைச் சுட்டிக் காட்டுகின்றன என்கிறார் குமார் ரூபசிங்ஹ.

குமாரின் கருத்துப்படி ஆபிரிக்காவில் நிகழ்ந்துவரும் ஜனநாயக மாற்றங்கள், அரசியல்வாதிகளால் தேசிய எழுச்சிகளைத் தூண்டும் விதத்தில் கையாளப் படுவதால் அங்கும் பல ஆபத்தான நிலைகள் தோன்றக்கூடும். அத்துடன் பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் புதிய பிரச்சனைகள் தோன்றலாம், ஆப்கானிஸ்தானில் ஏற்கனவே பாரிய பிரச்சனைகள் உள்ளன.

இவ்வாறான பிரச்சனைகள் பற்றிச் சரியான விளக்கத்தை அளிக்க, இன்ரநாஷனல் அலேட் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து வருகிறது. இவ்வாறான கருத்தரங்குகள் பிரச்சனையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருக்கும் இடையே ஒழுங்கு செய்யப் படுகின்றன. உகண்டாவில் இன்ரநாஷனல் அலேட்டின் எச்சரிக்கையை அடுத்து அரசு எடுத்த நடவடிக்கையினால் அங்கு சுமுக நிலை தோன்றிவருகிறது.

தற்போது ஆயிரத்துக்கு மேற்பட்டோரைப் பலியெடுத்த யுத்தம் அல்லது உள்நாட்டு யுத்தங்கள் 32 நிகழ்கின்றன. இதைவிட மேலும் நாற்பது இவ்வாறான சிறு யுத்தங்கள் நிகழ்கின்றன. இவை தீர்க்கப் படுவதில் இன்ரநாஷனல் அலேட் தன்னால் இயன்ற பங்கை வழங்க முயன்று வருகிறது.

இப்பேட்டியில், நோர்வேயைவிட்டு நீங்கும் நோக்கம் உண்டா எனக் கேட்கப்பட்டபோது, மூன்று வருடங்களே இன்ரநாஷனல் அலேட்டின் செயலாளராகத் தான் லண்டனில் இருப்பேன் எனவும், அதன்பின் மீண்டும் ஒஸ்லோ அமைதி ஆய்வு நிலையத்துடன் இணைவேன் எனவும் குமார் கூறினார். இலங்கையைவிட்டுத் தான் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்ட பின்னர் தான் வாழ ஒரு நல்ல இடமாக நோர்வே இருந்ததாகவும், தனது (நோர்வேஜிய) மனைவி குழந்தைகளுடன் மீண்டும் நோர்வே வருவேன் எனவும் குமார் நம்பிக்கை தெரிவித்தார்.●

www.tamilarangam.net



# ஒரு நாணயத்தின் பல்வேறு பக்கங்கள்

கடந்த இதழில் சுவடுகள் வாசகர் ஒருவர் சில கேள்விகளை எழுப்பியிருந்தார். இந்தக் கட்டுரை பல்வேறு அம்சங்களை ஒரே இடத்தில் விவாதிக்க முயன்றதால் எதுவுமே எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை; அல்லது எனது சிற்றறிவுக்கு எட்டவில்லை.

தமிழர்கள் திருப்பி அனுப்பப்படச் சில காரணங்களை அவர் சுட்டிக் காட்டியிருந்தார். ஆனால், அவற்றில் முக்கியமான ஐரோப்பா சார்ந்த காரணிகளை விலக்கிப் பார்த்தாலும் (அவை சரியானவை என்றே நான் கருதுகிறேன்), ஏனைய காரணங்கள் தொடர்பாக எனக்குச் சரியாகத் தெளிவில்லை.

வேகேயில் (VG) வந்த கட்டுரை தொடர்பாக சுவடுகள் கருத்துத் தெரிவிக்காதது சுவடுகளின் தவறுதான். இது அவர்களது நழுவல் தன்மைக்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் அவர்களை விட்டாலும், சுவடுகளின் வாசகர்கள் என்ன செய்தார்கள்? (கட்டுரையை எழுதியவர், நான் உட்பட.) வேகேயில் வெளிவந்த கட்டுரையில் உண்மை இருக்கிறதா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், மற்றவர்களை விலைபோனவர்கள் என விமர்சிப்பது கூடாது.

'வேகே' பத்திரிகையில் வந்த விடயங்கள் பற்றி மிகப் பிந்தியே கருத்துத் தெரிவித்த சுவடுகள் அதைத் தெளிவான முறையில் (சரிபிழைகள் வாசகர்களுக்கு விளங்கும் வகையில்) ஏன் எழுதவில்லை. மிரட்டிக் காசு பறிப்பது பற்றிச் சுவடுகள் மௌனம் சாதிப்பதை ஏன் கட்டுரை கண்டிக்கவில்லை? ஆட்கடத்தல், காசு அடித்தல் போன்ற செய்திகள் பற்றி சுவடுகள் ஏன் கருத்துத் தெரிவிக்கவில்லை? கிறிங்சோவில் தமிழ் அரசியல்வாதி தாக்கப்பட்டு TVயிலும் சகல பத்திரிகைகளும் தமிழரை நாறடித்தபோது அது தமிழரைப் பாதித்தமை பற்றி இவரது கட்டுரை ஏன் தொடவில்லை? இவை யாவற்றையும் விலாவாரியாக விமர்சனம் செய்வது எனது நோக்கமல்ல. சுவடுகள் மட்டும் தவறு செய்யலாம், ஏனைய அமைப்புகள் தவறு செய்யக் கூடாது என்று கட்டுரையாசிரியர் கருதுகிறாரா? மற்ற அமைப்புகளுக்கும் சில நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன. அவை தமது நிலையை விளங்கப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாதவரை சந்தேகங்கள் வளரும்.

ஒரு முக்கிய சம்பவம் நிகழும்போது அதுபற்றி react பண்ணுவது, (நியூட்டனின் விதிப்படி) மனித இயல்பு. ஆனால் இங்குள்ள எல்லா அமைப்புகளும் இதைத் தவிர்த்து வந்திருக்கின்றன. சுவடுகள் ஆசிரியர் மேதினத்தன்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஏன் இங்குள்ள தமிழ் அமைப்புகள் அந்தச் சம்பவத்தைக் கண்டனம் செய்யவில்லை.

சுவடுகள் ஆசிரியர் தாக்கப்பட்டது சரிதான் என்று பல்கலைக்கழக மாணவர் கூட்டத்தில் வாதித்தவர்களும், தாங்கள் சம்பந்தமில்லை என்று கைகழுவியவர்களுக்கும் மத்தியில் ஒரு தமிழ் அமைப்பாவது சுவடுகள்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் பிழை என்று பகிரங்கமாகக் கூறவில்லை? கட்டுரையாசிரியர் இவ்வாறான விடயங்களைப் பற்றிக் கட்டுரையில் குறிப்பிடாதது தெரிந்து செய்த தவறா அல்லது தெரியாது செய்த தவறா? (27ம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




SUVADUGAL, A Tamil Monthly from Norway, Issue Nr 41, December'92

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்